புதுக்கோட்டை ஸமஸ்தான

தேசிய யுத்த முன்னணி நிலையம்.

பிரசுரம்] 1944-ம் ௵ டிஸம்பர் ௴ 16௳ [ந. 228

தேசிய யுத்த முன்னணி விஷயங்களைப் பற்றிய கட்டுரைகளை பத்திராதிபர் அன்புடன் வரவேற்கிறார். அக்கட்டுரைகள், தகுதியுள்ளவைகளாக இருக்கும் பக்ஷத்தில், கட்டுரை ஆசிரியரின் பெயருடன் வெளியிடப்படும். கட்டுரைகள் சுருக்கமாக இருக்கவேண்டும்; ஒரு வாரத்திற்கு முன்னதாகவே அனுப்பவேண்டும்.

யுத்தத்துக்குப்பின் உலக சீர்திருத்தம்.

—26-ம் பக்கம் பார்க்க.

பிரஸங்கம் CCXXVIII.

ஜெர்மன் சேனையின் மனப்பான்மை.

எதிர்கால ராஜீய பிரச்னையைப்பற்றி ஒருவிதமான எண்ணமுமில்லை.

(எட்டாவது சேனை அறிக்கை).

ஜெர்மனி பேரில் பூர்ணமான ராணுவ வெற்றி ஏற்படுவது சமீபித்து விட்டதாலும், ஜெர்மனியை நேசதேசத்தார்கள் ஆக்கிரமிப்பது நிச்சயம் என்று ஏற்பட்டுவிட்டதாலும், நேசதேசத்தார்கள் முக்கியமாக தோல்வி சமயத்தில் ஜெர்மானியர்களின் ராஜீய உணர்ச்சி எவ்விதமிருக்கிறதென்று கவனித்து வருகிறார்கள். இந்தக் கட்டுரையில் யுத்தக் கைதிகளாக நம் வசமுள்ள ஜெர்மானியர்கள் வெளியிட்ட ராஜீய எண்ணங்களை ஒரு உற்று நோக்காளர் எடுத்துரைக்கிறார்.

நாஸிக்கக்ஷி கீழறுப்பான் வேலையைச் செய்யக்கூடிய ஒரு ஏற்பாடான இயக்கத்தை ஏற்பாடு செய்ய நீண்டகால திட்டத்தை நிறுவுவதினால் எதிர்கால க்ஷேமத்தைக் கோரலாமென்று நினைக்கிறார்கள். இந்தக் கீழறுப்பான் வேலை ஆக்கிரமிப்பு அதிகாரிகளுக்கு சிரமங்களை உண்டுபண்ணுவதுடன் அவர்களை பதில் நடவடிக்கைகளை எடுக்கும்படி தூண்டுவதன் மூலம் ஆக்கிரமிப்பு நாடுகளில் ஜெர்மனியர்களை அந்நாட்டு தேசத்தவர்கள் வெறுத்தது போன்ற நிலைமையை ஏற்படுத்துமென்று அவர்கள் நினைக்கிறார்கள்.

ஆகிலும் பொது மக்களின் அபிப்பிராயம் வேறு விதமாகயிருக்கிறது. அவர்கள் சமீப எதிர்காலத்தில் தங்களுடையவும், ஜனசமூகத்தினுடையவும் க்ஷேமத்தைப்பற்றி ஆலோசிக்க வேண்டும். அவர்கள் எவ்விதம் நினைத்து வருகிறார்கள் என்று பார்ப்போம்.

D. தினத்திற்குப்பின் மேற்குப் போர்முனையில் மட்டும் 5 லக்ஷம் ஜெர்மானியர்கள் நேசதேசத்தாரால் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்களில் அயல் தேசத்தவர்கள் ஒரு ப்ரசமிருந்தபோதிலும், பெரும்பாலுமுள்ளவர்கள் ஜெர்மன் மக்களின் பிரதிநிதிகள் என்றே நினைக்கலாம். தோல்விக்குப்பின் ஜெர்மனியின் நிலைமையைப்பற்றி அவர்கள் வெளியிடக்கூடிய அபிப்பிராயம் கவனார்கமுள்ளது.

அவர்களில் பெரும்பான்மையோர் 30 வயதுக்குட்பட்டவர்கள். அவர்களின் அபிப்பிராயம் மற்றவர்களின் நடவடிக்கையை நன்கு பாதிக்கக்கூடும். முக்கியமாக வயது முதிர்ந்தவர்களும் ஸ்திரீகளும் பொதுஜன அபிப்பிராயத்தில் அவர்களுடைய அபிப்பிராயத்தையும் நிராகரித்துவிடமாட்டார்கள்.

அந்த வாலிபர்கள் முகாம்களின் அதிகாரிகளிடம் ஜெர்மன் மக்களுக்கு எதிர்காலத்திய ராஜீய நிலைமையைப்பற்றி யாதொரு எண்ணமுமில்லையென்று சொல்லுகிருர்கள். அதைப்பற்றி அவர்களுக்கு யாதொரு கவலையும் இல்லை. அது நம்பக்கூடியதாக இல்லாதபோதிலும், ஆகிலும் கிடைத்திருக்கும் ருஜுவிலிருந்து அது உண்மைதான் என்று நினைக்கவேண்டியிருக்கிறது.

மூன்று ரகம்.

அவர்களை மூன்று வகைப்படுத்தலாம். முதலாவதாக சிலர்களுக்கு நாஸிகளின் கொள்கைகளில் பூர்ணமான நம்பிக்கையிருந்துவருகிறது. அயல்நாடுகளில் ஜெர்மன் சேனைகளுக்கு ஏற்பட்ட அழிவுகள் அவர்களின் நம்பிக்கையைக் கெடுத்துவிடவில்லை. ஜெர்மன் பூமியில் தோல்விகள் ஏற்பட்டாலும் அவைகளும் அவர்களின் வெறியை பாதிக்கப்போவதில்லை.

ஹிம்லர் அவர்களைத்தான் நம்பியிருக்கிருன். அவர்கள் சிறு பான்மையுள்ளவர்களாகயிருந்தபோதிலும் அவர்களின் தொந்தரவு நடவடிக்கை மிருதியானது.

இரண்டாவதாக மிருதியாக உள்ள நாஸிக்கக்ஷிக்காரர்கள் நாஸிக்கக்ஷியும் நாஸி ஆக்ஷியும் போய்விட்டனவென்றும், தோல்விக்குப்பின் அழிந்துபோய்விடுமென்றும் முடிவுக்கு வந்து அதற்காக அவர்கள் வருத்தப்படாமலிருக்க முடிவு செய்திருக்கிருர்கள்.

ஆகிலும் அவர்கள் ஹிட்லரைப்பற்றி மட்டும் தங்களுடைய அபிப்பிராயத்தை மாற்றிக்கொள்ளவில்லை.

ஹிட்லரை உயர்தர ராணுவ அதிகாரி என்றும், நிர்வாகியென்றும், நாஸிக் கக்ஷித்தலைவர் என்று நினைப்பதோடு ஹிட்லர் தேசத்துக்கும் ஜெர்மானியர்களுக்கும் தகப்பனுர் போன்றவர் என்று அவர்கள் நினைக்கிருர்கள்.

ஹிட்லர் ஜெர்மனியின் தற்போதிய தேவைகளையும், பிரச்னைகளையும், முடிவையும் தாண்டி மேலான ஒரு ஸ்தானம் வகிக்கிருரென்று அவர்களுடைய அபிப்பிராயம்.

ஹிட்லர் பொதுஜனங்களின் க்ஷேமத்தை மிருதியாகக் கோருகிருரென்றும் அவர்களுக்காக எல்லாவற்றையும் அவசியமானல் நாஸிக்கக்ஷியையும் தியாகம் செய்யத்தயாராக உள்ளவனென்றும் அவர்கள் நம்பியிருக்கிருர்கள்.

ஜெர்மனியின் மனோ நிலைமையை அறிய இது விசித்திரமான சூசகமாகயிருக்கிறது.

யுத்தத்தில் வெற்றி பெறலாமென்று நினைத்துத்தான் ஹிட்லர் யுத்தத்தை நடத்தி வருகிருன். அவனல் யுத்தத்தில் வெற்றிபெற முடியாதென்று அவன் அபிப்பிராயப்பட்டால் ஜனங்களுக்குத் தொந்திரவு ஏற்படாமல் அவன் யுத்தத்தை நிறுத்தியிருப்பான. அவர்களுடைய ராஜீய அபிப்பிராயத்தில் ஹிட்லர் ஒருவன்தான் நிரந்தரமான அம்சம்.

ஹிட்லர்—சமாளிக்கக்கூடியவன்.

அவர்களுடைய தோற்றத்திலிருந்து ஹிட்லர் மறைந்தால் அதன்பின் ஒன்றும் நிலைபெற்றிருக்கமுடியாது.

இந்த அபிப்பிராயத்தினின்றும் ஆச்சரியப்படத்தக்க விளைவுகள் உண்டாகியிருக்கின்றன.

நாஸிதத்வம் மறைந்துவிடுமென்று ஒப்புக்கொள்ளுகிறவர்களையும், யார் நடவடிக்கையை மேற்கொண்டு சமாதானம் செய்து ஜெர்மனினுடைய புனருத்தாரணம் செய்வார்களென்று வினவினல், ஹிட்லர்தான் என்று நிச்சயமாய்ச் சொல்லுவார்கள். இந்தப் பிரளயத்தில் ஹிட்லரும் மடிந்துபோய்விடுவானென்பதைக்கூட அவர்கள் மதிக்கவில்லை.

இவ்வித அபிப்பிராயமுள்ள வாலிபர்களிடம்தான் அடிக்கடி பச்சாத்தாபம் காணப்படுகிறது.

யுத்தத்தில் ஜெர்மனி தோற்றுவிட்டதென்றும் அதற்கு ஹிட்லர் செய்த தவறுதல்கள் தான் காரணமென்றும் அவர்கள் ஒப்புக்கொள்ளுகிறார்கள். இது அவமானமானதென்றும், பரிதபிக்கக்கூடியதென்றும், அவர்களுக்கு உலகில் நல்ல கியாதி கிடைத்திருக்கவேண்டுமென்றும் அவர்கள் வருத்தப்படுகிறார்கள்.

ஐரோப்பாவில் அநேகமாக ஜெர்மனி வெற்றிகரமாக ஒழுங்கு முறையை அமைத்துவிட்டதென்றும், ஒவ்வொருவரும் சந்தோஷமாகவும் திருப்திகரமாகவும் இருக்கிறாரென்று நினைக்கத் துவங்கினார்களென்றும், உலகம் ஜெர்மனிக்கு நன்றி செலுத்தக்கூடிய உபயோகமுள்ள காரியங்களைச் செய்துவிட்டோமென்று அவர்கள் அந்தரங்க சுத்தியாய் எண்ணியிருந்தபொழுது நிலைமை மாறிவிட்டது.

திடீரென்று விரோத மனப்பான்மையும், செய் நன்றி இல்லாததுமான உலகம் தோன்றிற்று. ஸ்நேகிதர்கள் துரோக சிந்தனையுள்ளவர்களென்று புலப்பட்டுவிட்டார்கள். ஆப்தர்களாக மாறிவிட்டார்களென்று நினைத்த பிரான்ஸ் நம்மை வெறுக்க முன் வந்தது. ஒவ்வொருவரும் ஜெர்மனி அன்புடனும் அக்கரையுடனும் ஏற்பாடு செய்தவர்களை தேசங்கள் தவிடுபொடியாக்க எண்ணம் கொண்டுவிட்டார்கள்.

மூன்றுவதாக பெரும்பான்மையாகவுள்ளவர்கள், அவர்கள் தேசிய ஜனசமூக சமத்துவத்தையும் ஹிட்லரையும் ஆதரிக்கவில்லை. இந்த அமைப்பு எவ்வளவு சீக்கிரம் மறையுமோ அப்பொழுதுதான் சமாதானம் தோன்றும் என்றும் அவர்களின் அபிப்பிராயம்.

அவர்களின் அபிப்பிராயப்படி சமாதானம் என்பது அவரவர்கள் குடும்ப வாழ்க்கைக்குத் திரும்பிவருவது, போரை நிறுத்துவது. இதற்குமேல் அவர்கள் மனதில் ஒரு அபிப்பிராயமும் தோன்றவில்லை.

அவர்கள் ஜெர்மனியை நேசதேசத்தார்கள் ஆக்கிரமிப்பது சகஜம் என்றும் அது நீடித்திருக்கவேண்டுமென்றும் வேண்டிக்கொள்ளுகிறார்கள்.

பிரிடனும் அமெரிக்காவும் தங்களுடைய சிரத்தையை இழந்துபோய்விடுவார்களோவென்றும், ஜெர்மனியை ருஷ்யர்களிடமும் அமைதியின்மைக்கும் ஒப்படைத்து விடுவார்களோவென்றும் தான் அவர்கள் கவலைப்படுகிறார்கள்.

அவர்கள் ஒழுங்கு ஏற்படவேண்டுமென்றுதான் கவலை கொண்டிருக்கிறார்கள்.

ஜெர்மனியின் நிர்வாகப்பொறுப்பை சுலபமாக அடைந்துவிடலாமென்று அவர்கள் நினைக்கிறார்கள்.

நேசதேசத்தாரின் ஏற்பாடு.

நேசதேசத்தார்கள் ஜெர்மனியின் நிர்வாகத்துக்கு ஏற்பாடு செய்து அது எவ்விதம் நடைபெறவேண்டுமென்றும் விதிப்பார்களென்று அவர்கள் நம்பியிருக்கிறார்கள்.

வீடுகளை புனருத்தாரணம் செய்வதற்கும், வியாபாரத்தையும் கைத்தொழில்களையும் உயிர்ப்பிப்பதற்கும், சாதாரணமான சமாதான வாழ்க்கையை அமைப்பதற்கும், நேசதேசத்தார்கள்தான் திட்டங்களை நிறுவி உத்தரவுகளை பிறப்பிக்கவேண்டுமென்றும் அவர்கள் நம்புகிறார்கள்.

இவ்விதமாக தனிப்பட்டவர்களும் ஜன சமூகமும் யாதொரு பொருப்பையும் உணராத நிலைமையிலிருந்துதான் ஜெர்மனியில் ஆச்சரியப்படத்தக்க ஹீனத்வனி ஏற்பட்டிருக்கிறதென்ற தோற்றம் புலப்படுகிறது.

சுறுசுறுப்பாக வாழ்நாளை நடத்தக்கூடிய இந்த வாலிபர்களிடம் பொதுஜன அபிப்ராயமே காணப்படவில்லை. தனிப்பட்ட முறையில் முற்போக்கான எண்ணங்களோ அவர்களிடம் காணப்படவில்லை. எந்நிலைமையிலும் அவர்களிடம் ராஜீய எண்ணங்களே சூன்யமாக இருக்கிறது.

நாஸிகள் 12 வருஷ ஆக்ஷியின் விளைவு இதுதான். ஜெர்மனியின் தோற்றத்திலிருந்து ஹிட்லரைப் போன்ற சக்தியுள்ள ஒருவர் உண்டாகவேண்டுமென்றும், அவர் எல்லோரையும் ஒன்றுபடுத்த வேண்டும் என்ற அபிப்ராயம் மறைமுகமாகக் காணப்படுகிறது. அவ்விதமான மனிதன் தோன்றுவது நிச்சயமில்லையென்றும் அவர்கள் சந்தேகப்படுகிறார்கள்.

ருஷ்யாவின் சேவை.

மேலும் ருஷ்யா இப்பொழுது யுத்தத்துக்குப்பின் ஜெர்மனி சம்பந்தப்பட்ட மட்டிலும் என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்போகிற தென்பதைப் பற்றித்தான் அவர்கள் மிகுதியான கவலை கொண்டிருக்கிறார்கள். நாஸிக் கட்சியில் ஒழுங்கீனம் ஏற்பட்டிருக்கிறதென்று நாஸிகளை வெறுக்கிறவர்களில் பெரும்பான்மையோர் நினைத்தபோதிலும் அவர்களில் சிலர் ருஷ்யாவைக் கொஞ்சம்கூட அஞ்சியிருக்கவில்லை.

ஆஸ்திரியர்கள் ருஷ்யர்களுடன் நல்ல முறையில் ஒத்துவாழலாமென்று நினைக்கிறார்கள். எல்லா ஆஸ்திரியர்களும் ஆஸ்திரியாவின் ஸ்வதந்திரத்தைப் பெற்றுவிடலாமென்று நினைக்கிறார்கள். ஆனால் அவர்கள் டெகரான் மகாநாட்டின் முடிவை அறியவில்லையென்று தோன்றுகிறது. மற்றவர்களிடம் ருஷ்யாவின் கொள்கையைப் பற்றி மிகுதியான பீதி காணப்படுகிறது. எல்லோருக்கும் அக்கிரமங்களின் பயம் உண்டாகியிருக்கிறது. ருஷ்யா என்ற சொப்பனத்தை மறைத்துக்கொள்ள சிலர்களுக்கு விநோதமான எண்ணங்கள் தோன்றியிருக்கின்றன.

நார்மண்டியில் குவிக்கப்படும் ஏராளமான யுத்த தளவாடங்களை நேசதேசப்படைகள் ஜெர்மனியைத்தாக்க உபயோகிப்பதுடன், அமெரிக்கர்கள் ஜெர்மனியையும் தாண்டிச் சென்று ருஷ்ய முன்னேற்றத்தைத் தேக்கிவிடுவார்களென்ற எண்ணமும் அவர்களிடம் காணப்படுகிறது.

சிலர் கோயபல்ஸ் சொல்லுவதுபோல யுத்தத்துக்குப்பின் ருஷ்யாவும் பிரிடனும் பிரிந்துபோய்விடுமென்று நினைக்கிறார்கள். பொதுவாக ஜெர்மனியை முறியடித்தபின் பிரிடனும் அமெரிக்காவும் ருஷ்யாவுடன் போர் புரிவார்களென்றும், அவ்விதம் செய்ய அவர்கள் கடமைப்பட்டிருக்கிறார்களென்றும், மேற்கு வல்லரசுகள் அவ்விதம் செய்வார்களென்று எதிர்பார்க்க தோல்வியுற்ற ஜெர்மனிக்கு உரிமையுண்டென்றும் ஜெர்மானியர்கள் சொல்லிவருகிறார்கள்.

வலுவான அஸ்திவாரம்.

ஜனநாயகத்தின் அர்த்தமே அவர்களுக்குப் புலப்படவில்லை. மதஸ்தாபனங்கள் தேசத்தின் புனருத்தாரனத்தில் பொருப்பான ஸ்தானம் வகிக்குமென்று சிலர் சொல்லுகிறார்கள். மற்றும் சிலர் தொழிலாளர் சங்கங்களும் வியாபார சங்கங்களும் இதில் கலந்து கொள்ளுமென்று சொல்லுகிறார்கள். அவைகள் உலக அமைதிக்கு ஒன்றும் செய்யக்கூடுமென்றும் அவர்கள் நம்பக்கூடவில்லை. சமாதானமும், பத்திரமும், நீதிமுறைப்படி நிர்வாகமும் உள்ள ஒழுங்கான நிலைமையுள்ள ஒரு உலகம் தோன்றவேண்டுமென்று அவர்கள் பிரியப்படுகிறார்களென்பதை ஆதாரமாகக்கொண்டுதான் நேசதேசத்தார்கள் தங்களுடைய திட்டங்களை நிறுவவேண்டும். ஜெர்மன் மக்களின் வாழ்க்கைமுறையை விசேஷமாக பாதித்துவந்த இயக்கங்களுக்கும் ஸ்தாபனங்களுக்கும் விசவாசம் காட்டுவது என்ற மனப்பான்மையில்தான் எதிர்காலத்திய ஜெர்மனிக்கு அஸ்திவாரம் போடக்கூடிய உருவான சாசுவதமான எண்ணங்கள் காணப்படுகின்றன.

ஹிட்லர் ஜனங்களிடமுள்ள வியவகார உணர்ச்சியையே வெகுவாக அழித்து விட்டான்.

பெரும்பான்மையோர் அமைதி உள்ளவர்களாகவும் பிறர் சொல்படி நடக்கிறவர்களாகவும் இருப்பார்கள்.

நேசதேசத்தார்கள் தவறுதல்களைச் செய்வார்களென்றும் அதிலிருந்து பிரமையை இழந்து அலக்ஷிய புத்திகொண்ட ஜெர்மானியர்கள் மறுபடியும் உத்சாகமடைந்து மற்றொரு பூரரையும் சக்தியுள்ள ஒரு கக்ஷியையும் ஆதரிப்பார்களென்றும் நாஸிகள் நினைத்து வருகிறார்கள்.

நேசதேசத்தார்கள் ஐரோப்பாவை ஒன்றுபடுத்த ஒரு முற்போக்கான திட்டத்தை நிறுவாவிடில் இந்த அபாயம் உண்மையாகிவிடும்.

ஹிட்லரின் புதிய உலக திட்டம் பயங்கரமானது. ஆகிலும் நன்றாய் கவனித்தால் அரசாகத்தைவிட எந்த உலக அமைப்பும் சிறந்ததுதான். ஐரோப்பாவின் புனருத்தாரணத்தில் வாலிபமுள்ள ஜெர்மானியர்கள் தோல்வியை ஒப்புக்கொண்டு தங்களுடைய சக்திக்குத் தக்கவாறு புதிய வேலைகளை மேற்கொள்ளலாம்.

வார யுத்தச் செய்திகள்.

(A)-முக்கியமான சம்பவங்கள்.

5—12—44 (செவ்வாய்க்கிழமை).	செம்படை ஹங்கேரியிலுள்ள ஷிகெட்வார் இருப்புப் பாதை ஜங்ஷனைப் பிடித்தது.
	பிரிடிஷ் 8-வது சேனை இதாலியில் ராவென்னாவை ஆக்கிரமித்தது.
6—12—44 (புதன்கிழமை).	அமெரிக்கர்கள் லொரேனிலுள்ள சாரெகுமினைப் பிடித்தார்கள்.
	ஆல்பேனியர்கள் ஸ்கூடாரியை விடுவித்தார்கள்.
	செம்படையும் யூகோஸ்லாவிய கொரில்லாக்களும் யூகோஸ்லாவியாவிலுள்ள சிட்டை விடுவித்தன.
7—12—44 (வியாழக்கிழமை).	அமெரிக்கர்கள் லெயிடியின் மேற்குக்கரையில் இறங்கினார்கள்.
	ருஷ்யர்கள் பாலாடன் ஏரியின் தெற்குக்கரை பூராவிலிருந்தும் எதிரிகளை சுத்தி செய்து விட்டனர்.
8—12—44 (வெள்ளிக்கிழமை).	அமெரிக்கர்கள் ஸார் நதியை நான்கு இடங்களில் சுத்தி செய்தார்கள்.
	ருஷ்யர்கள் வியன்னாவுக்குப் போகும் இருப்புப்பாதையிலுள்ள லெப்ஸனியைப் பிடித்தார்கள்.
9—12—44 (சனிக்கிழமை).	ருஷ்யர்கள் ஹங்கேரியில் புடாபெஸ்டுக்கு வடகிழக்கிலுள்ள தற்காப்புகளை ஊடுருவிச்சென்றார்கள்.
10—12—44 (ஞாயிற்றுக்கிழமை).	அமெரிக்கர்கள் லெயிடித் தீவில் ஆர்மாக்கைக் கைப்பற்றினார்கள்.
	கடற்தளபதி ஸர் பி. பிரேசரின் கீழ் பஸிபிக்போரில் ஈடுபட ஒரு புதிய சக்திவாய்ந்த பிரிடிஷ் கடற்படை தயாரிக்கப்பட்டிருக்கிறது.
11—12—44 (திங்கட்கிழமை).	பிரெஞ்சு 1-ல் சேனை ஆல்ஸாஸிலுள்ள மன்ஸ்டருக்குள் நுழைந்துவிட்டது.
	சீனர்கள் குவேசௌவிலிருந்து ஜப்பானியர்களைத் துரத்தியடித்துவிட்டார்கள்.
	நேசதேசப்படைகள் பர்மாவில் காதா, இண்டா, நாபா முதலிய இடங்களைப் பிடித்தன.

(B)-செய்திச் சுருக்கம்.

மேற்குப் போர்முனை:—(1) அமெரிக்க 1-வது படை ரைன் நதியிலுள்ள கோலோன் என்னும் நகரத்திற்கு சமீபத்தில் வந்துவிட்டது. அது பெர்க்ஸ்டீன், ஸ்போர்ட்ஸ்பிளாட்ஸ், ஹஸன்பெல்ட், மியோர்டி, எக்ட்ஸ், ஓபர்கிஷ், ஷ்லிக் முதலிய இடங்களைப் பிடித்துவிட்டது. ஜூலிச் பிராந்தியத்தில் ஏற்பாடான எதிர்ப்பு ஓய்ந்துவிட்டது.

(2) அமெரிக்க மூன்றாவது படை ஸார் நதியை மற்றொரு முனையில் தாண்டி ஸார்பிரக்கனுக்கு வடக்கிலும் தெற்கிலும் பலமாகத் தாக்கிவருகிறது. ரூர்லிங்கன், வஸ்ட்விலர், ப்ளிஸ்பிரக்கன் முதலிய இடங்கள் பிடிபட்டன, ஸார்லாடர்ன், சார்குமினிஸ், டில்லிங்கன் முதலிய இடங்களில் கடும்போர் நடைபெறுகிறது. வெர்ட்ஸ்விலர், ரோஸ்பிரக்கன், உல்பெர்டிஞ்சன் முதலிய இடங்களுக்குள் படைகள் நுழைந்துவிட்டன. பிரியாண்ட் கோட்டை விழுந்துவிட்டது.

(3) அமெரிக்க ஏழாவது சேனை ஸார் யூனியனுக்கு வடகிழக்கில் முன்னேறி ஜெர்மன் எல்லையில் 40 மைல் அளவிற்கு வியாபித்துவிட்டது. பட்டன், நிஜூபன், பாட்ஸ்வில்லர், விஷெல்ஸ்கோப், லாபோட்ரி, ஹாகனூவ், ரெக்ஷாபன், கிரிஸ்பாக், நீடர்பிரான் முதலிய இடங்கள் பிடிபட்டன.

(4) பிரெஞ்சு 1-வது சேனையும், அமெரிக்க 7-வது சேனையும் ஆல்சாஸ் சமவெளியில் ஆஸ்ட்ஹிமை விடுவித்தன. தானே சுத்தி செய்தன, மன்ஸ்டருக்குள் நுழைந்தன.

கிழக்குப் போர்முனை.—ருஷ்யப் படைகள் புடாபெஸ்ட்டின் சுற்றுப்புறங்களை அடைந்து விட்டன. ஹங்கேரியில் கீழ்க்கண்ட இடங்கள் பிடிபட்டன. எர்ஸிஸி, ராஸ்மாஸ், பார்க்ஸ், எனிங், மைக், சோகோனியா, காடோனி, லெப்சனி, சாரோஸ்ட், பாலாஸாகியார்மாட், நோக்ராட், வாக்ஸ், ஆஸாத், பாலாங், ஆலோஸ்ஜெட், கோயடோலோ, ஸெரன்ஸ்.

இதாலி.—எட்டாவது சேனை மெச்சானோ, ராமெரோ, ஆல்மாடெல்லோவையும், 5-வது சேனை மாண்டி பென்சோலா, பிடெலிலியையும் பிடித்தது.

பிலிப்பைன்ஸ்.—லெயிடித் தீவில் மற்றொரு இடத்தில் படைகள் இறங்கின. எதிரிகள் வசமிருந்த யமாஷிடா அரணின் தெற்குக் கோடியிலிருந்து அவர்கள் துரத்தியடிக்கப் பட்டார்கள். லெயிடிக்கருகில் நான்கு சாமான் கப்பல்களும், மூன்று நாசகாரிகளும் கொண்ட எதிரியின் கப்பல் கூட்டம் மூழ்கடிக்கப்பட்டது. இந்த நடவடிக்கையில் மற்றொரு நாசகாரியும், இரண்டு சாமான் கப்பல்களும் தீப்பற்றி எரிந்துகொண்டிருந்தன. ஆர்மாக் விழுந்து விட்டது.

சூபர் பறக்கும் கோட்டை விமானங்கள் போனின் தீவுக்கூட்டத்திலுள்ள ஜப்பானிய தளமான ஐவோஜிமாவையும், டோகியோவையும் ஜப்பானியத் தீவிலுள்ள ஹான்ஷூவையும் தாக்கின.

பர்மா.—பிரிடிஷ் படைகள் இண்டா நகரத்தைப் பிடித்தபின் நாபாவை அடைந்து விட்டன. கிழக்கு ஆப்பிரிக்கப் படைகள் கலீவா யேயு ரஸ்தா மூலமாக ஷ்வேகினை நோக்கி முன்னேறுகின்றன. பூதேடாங்க் திரும்பிப் பிடிக்கப்பட்டது.

சைனு.—சீனப் படைகள் ஷோன், சான்கோ, லியூசேய் முதலிய இடங்களைத் திரும்பிப் பிடித்தன. மாங்க்சாங் பிடிபட்டது. ஜப்பானியப் படைகள் குவேசௌ மாகாணத்திலிருந்து துரத்தியடிக்கப்பட்டார்கள். சுங்கிங்கிக்கு ஏற்பட்ட அபாயம் நீங்கிவிட்டது.

சத்துருவினுடையவும், சத்துருவினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில் பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

3—12—44. (ஞாயிற்றுக்கிழமை).

ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.

பகல்.—போக்குவரத்துகள் இதர இலக்குகள் ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களுக்கு அருகாமையில்.

இரவு.—ராணுவ இலக்குகள்.—மேற்கு ஜெர்மனி.

தூரக்கிழக்கு (Far East).

ஜப்பானிய முனைகள்.—பிலிப்பைன்ஸிலுள்ள லெய்டி (Leyte).

பர்மா (Burma).

ரயில்வே ஸ்தாபனங்கள்.—மோல்மீன் (Moulmein), பாங்காக் (Bangkok).

எதிரி சைனியங்கள், மோட்டார் நிலயங்கள் துவியல்கள்.—சிண்ட்வின் பிரதேசம் (Chindwin).

எதிரி போக்து வரத்துகள்.—பர்மா (Burma),

4—12—44. (திங்கட்கிழமை).

ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.

ரயில்வேக்கள், வேலைகள் யுத்தத்தளவாடங்கள் தயார் செய்து சேமிக்குமிடங்கள் ராணுவ இலக்குகள்.—காஸ்ஸல் (Kassel), மெய்ன்ஸ் (Mainz), கெய்ஸ்ஸன் (Giessen) ஸோயெஸ்ட் பெப்ரா (Soest Bebra), மேற்கு ஜெர்மனியில் சில இடங்கள்.

"V-2" ஸ்டோர்கள் கடல் போக்குகள், வண்டி நிறுத்துமிடங்கள்.—ஹாலந்து (Holland).

ரயில்வே.—ரூர் (Ruhr).

இலக்குகள்.—ஒபர்ஹாஸன் (Oberhausen).

பலத்த முனைகள், தளவாடக்குவியல்கள், ஸ்டோர்கள், பீரங்கி ஸ்தாபனங்கள், டாங்கிகள், ரயில் கார்கள், மோட்டார் போக்கு வரத்துகள்.—பிரென்னர் (Brenner) பாதை, போ சமவெளி (Po), யூகோஸ்லாவியா (Yugoslavia).

கப்பல்கள்.—ரோட்ஸ் (Rhodes).

துறைமுகம், விமானச் சண்டைகளும், தரை மீதுள்ள விமானங்களும்.—கிழக்கு யுத்த அரங்கம்முழுவதும்.

இரவு.—ரயில்வே, தொழிற்சாலை ஸ்தலங்கள்—கார்ல்ஸ்ரூ (Karlsruhe), ஹெய்ல் பிரான் (Heilbronn).

தூரக்கிழக்கு (Far East).

ஒரு தகவலும் இல்லை.

பர்மா (Burma).

பங்கர்கள், குவியல்கள், படகுகள்.—சிண்ட்வின் (Chindwin).

இலக்குகள்.—மத்திய பர்மா (Central Burma).

5—12—44. (செவ்வாய்க்கிழமை).

ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.

(91 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன. 17 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை).

பகல்.—தொழிற்சாலை இலக்குகள்.-பெர்லின் (Berlin).

சேனைகள் யுத்த தளவாடங்கள் தயார்செய்து சேமித்துமிடங்கள்.—மன்ஸ்டர் (Munster), ஓபர்ஹாஸன் (Oberhausen).

நீராவி யந்திரங்கள், ரயில் கார்கள்.—ஸார் (Saar).

ரயில்வே தளங்கள்.—ரெய்ச்சாபன் (Reichshoffen) ஸ்டட்கார்ட்டிற்கு (Stuttgart), கிழக்கு.

பீரங்கி ஸ்தாபனங்கள், கட்டடங்கள்.—போலோனு (Bologna).

போக்குவரத்துகள்:—இதாலிய யுத்த அரங்கம்.

விமானச் சண்டைகள்.-ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும். (15 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).

இரவு.-ரயில்வே தொழிற்சாலை ஸ்தலங்கள்.—கார்ல்ஸ்ரூ (Karlsruhe), ஹெய்லிரான் (Helleronn).

ரயில்வே ஸ்தலம்.—ஹாம்ஜன் (Hamgen).

தூரக்கிழக்கு (Far East).

ஒரு தகவலும் இல்லை.

பர்மா (Burma).

போக்குவரத்துகள்.-மத்திய பர்மா (Central Burma).

ரஸ்தா போக்குவரத்துகள், ஷெட்டுகள்.—ஸகாய்ங்கிற்கும் (Sagaing), வெட்லெட் (Wetlet)-டிற்கும் இடையில்.

துருப்புகள், ஸப்ளைகள்.—இண்டா (Indaw) தெற்கிலுள்ள கிராமங்கள்.

6—12—44. (புதன்கிழமை).

ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.

பகல்.—போக்குவரத்துகள்.—மேற்கு ஜெர்மனி (Western Germany).

சேனைகள், யுத்த தளவாடங்கள் தயார்செய்து சேமித்துமிடங்கள்.—ஹாம் (Hamm).

ரயில்வே தளங்கள்.—கெம்டன் (Kemten).

ரயில்வே லயன்கள்.—லிப்லார் (Liblar).

இலக்குகள்.—வட ஹாலந்து (Northern Holland), கிழக்கு ஹாலந்து (Eastern Holland).

பீரங்கி ஸ்தாபனங்கள், தொழிற்சாலைகள்.—மன்ஸ்டர் (Munster) பிரதேசம்.

இலக்குகள்.—ஸார்பிரக்கன் (Saarbrucken) அதனைச் சுற்றிலுமுள்ள பிரதேசங்கள்.

ரயில் தளங்கள்.—ஹங்கேரி (Hungary), ஜெக்கோஸ்லவாகியா (Czechoslovakia), யூகோஸ்லாவியா (Yugoslavia).

சேமிப்புகள், மோட்டார்ப் போக்குவரத்துகள்.—ஆஸ்திரியா (Austria), ஹங்கேரி (Hungary).

எதிரி சைனியங்கள்.—இதாலிய யுத்தம் நடக்கும் பிரதேசங்கள்.

போக்குவரத்துகள்.-போ பள்ளத்தாக்கு (Po).

விமானச் சண்டைகள்.—ருஷ்யா யுத்த அரங்கம் முழுவதும்.

இரவு.—ரயில் தளங்கள், தொழிற்சாலை—ஆஸ்திரியா (Austria).

தூரக்கிழக்கு (Far East).

விமான நிலயம்.—பிரியானென் (Burianen), டுலாக் (Dulag), ஸான்பாபுலு (Sanpablu). லெய்டியிலுள்ள டால்லோபான் (Talloban).

பர்மா (Burma).

எதிரி சைனியங்கள்.—பாமோ (Bhamo).

மேற்கு அரங்கம்.—நியாங்கு (Nyaungu).

ராணுவ நிலயங்கள், பாலம்.—டவுன்கூ (Toungoo).

7—12—44 (வியாழக்கிழமை).

ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.

பகல்.—பீரங்கி ஸ்தாபனங்கள்—ஸாருக்கு (Saar) அருகில்.

ரயில் போக்குவரத்து.—லெபாக் (Lebach), பாட் க்ரூஸ்னக் (Bad Kreuznach).

4 ரயில்வே தளங்கள்.—ஸ்பெயர் (Speyer).

போக்குவரத்துகள்.—மேற்கு அரங்கில் யுத்தம் நடக்கும் இடங்களுக்கு அருகில்.

போக்குவரத்துகள்.—போ (Po), பிரென்னர் (Brenner).

ரஸ்தா, ரயில் இலக்குகள்.—வட இதாலி (Northern Italy).

படகுகள்.—காரோல் (Carole) கால்வாய்.

ராணுவ ஸ்தாபனங்கள்.-வியென்னு (Vienna).

விமானச் சண்டைகள், விமானங்கள்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும் தரைமேல் (3 எதிரி விமானங்கள் சுட்டுத் தள்ளப்பட்டன).

தூரக்கிழக்கு (Far East).

விமானத் தொழிற்சாலைகள்.—முக்டன், மற்ற இலக்குகள்.—(Manchuria) மஞ்சூரியா.

இதர முக்கிய கப்பல்கள், படகுகள்.-பிலிப்பைன்ஸின் அருகிலும், அதைச் சுற்றிலும்.

ஸ்டோர்கள், ஜப்பானியத் துருப்புகள்.—கலிவா (Kalewa) விற்குத் தெற்கே.

விமான நிலயங்கள்.—மாக்வி (Magwe), அக்யாப் (Akyab).
சேமிப்புகள்.—மாண்டலே (Mandalay), மித்கின (Myitkyina).
பாலங்கள்.—மத்திய பர்மா (CentralBurma).

8—12—44. (வெள்ளிக்கிழமை).

ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.

பகல்.—சேனைகள், யுத்த தளவாடங்கள் தயார் செய்து சேமிக்குமிடங்கள்.—டீயிஸ்பர்க் (Duisburg).
தொடர்ச்சியான எண்ணைக் கிணறுகள்.-மெய்டெரிச் (Meiderich).
ரயில் போக்குவரத்துகள், கட்டடங்கள்.-வட இதாலி (North Italy).
ரஸ்தா ரயில் போக்குவரத்துகள்.—யூகோஸ்லாவியா (Yugoslavia)
விமானச் சண்டைகள்—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும். (46 எதிரி விமானங்கள் சுட்டுத் தள்ளப்பட்டன).
சுரங்கவெடி பாவுதல்.—எதிரி ஜலப்பிராந்தியங்களில்.

தூரக்கிழக்கு (Far East.)

எதிரி சைனியங்கள்.—ஆர்மாக் (Ormoc)கிலும் அதனைச் சுற்றிலும்.
ஜப்பானியக் கப்பல்கள்.—லெய்டி (Leyte). பிலிபைன்ஸ்.
ஜப்பானிய ராணுவ ஸ்தாபனங்கள்.— இவோ ஜிமா (Iwo Jima).

பர்மா (Burma).

ரயில்வே இலக்குகள்.—பர்மா (Burma), சயாம் (Siam).
கடல்விமானங்கள்.—விக்டோரியாவுக்கருகில்.
பாலம்.—ஈயூ (Yeu).
ராணுவ இலக்குகள்.-மத்திய பர்மா (Central Burma).

9—12—44 (சனிக்கிழமை).

ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.

பகல்.—போக்குவரத்து இலக்குகள்.ஹாலந்து (Holland), மேற்கு ஜெர்மனி (Western-Germany).
தொழிற்சாலைகள்.—பர்க்ஸ்டெய்ன்பர்ட் (Burgsteinfurt).
ரயில்வே தளம்.—கெய்ஸர்ஸ்லாட்டனுக்கு (Kaiserslautern) வடகிழக்கு.
சேனைகள், யுத்த தளவாடங்கள் தயார்செய்து சேமிக்குமிடங்கள்.—டீயிஸ்பர்க் (Duisberg
தொழிற்சாலை இலக்குகள், ரயில் தளவாடங்கள்.—ரீகென்ஸ்பர்க் (Regensburg).
ஸ்கோடா தொழிற்சாலைகள்.—பில்சென் (Pilsen).
ரயில்வே தளங்கள்.—வில்லாக் (Villach).
லக்ஷியங்கள்.—வட இதாலி (North Italy).
போக்குவரத்துகள்.—போ (Po) சமவெளி.
கப்பல்கள்.—வட அட்ரியாடிக்.
ரஸ்தா ரயில் லயன்கள்.—யுகோஸ்லாவியா (Yugoslavia).

தூரக்கிழக்கு (Far East).

விமான நிலயங்கள்.— பிலிப்பைன்ஸிலுள்ள தீவுகள்.
சிறிய கப்பல்கள்.—லூஸான் (Luzon).
விமான நிலயங்கள்.—விஸாயாஸ் (Visayas).
விமானச் சண்டைகள்.—லெய்டி (Leyte).

பர்மா (Burma).

ரேடியோ ஸ்டேஷன் ஷுவேபோ (Shwebo).
விமான நிலயம்.—ஆன்பக்ஸ் (Onbux).
கட்டடங்கள்.—காலின் (Kawlin).
ரயில்வே.—வெட்வன் (Wetwun).
போக்குவரத்துக்கள் பாலங்கள், ரஸ்தா ரயில் போக்கு வரத்துகள் இதர லக்ஷியங்கள்.-மத்திய பர்மா (Central Burma)

விரோதிகளின் விமானப்படையெடுப்புகளின் விவரங்கள்.

4—12—44. (திங்கட்கிழமை).

பிரிடன் (Britain), ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு (Far East).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

5—12—44. (செவ்வாய்க்கிழமை).

பிரிடன் (Britain), ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு (Far East).

ஒரு தகவலும் இல்லை.

6—12—44. (புதன்கிழமை).

பிரிடன் (Britain), ருஷ்யா (Russia).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

தூரக்கிழக்கு (Far East).

விமான தளம்.—செய்பான் (Saipan).
(6 ஜப்பானிய விமானங்கள் சுட்டுத் தள்ளப்பட்டன).

7—12—44. (வியாழக்கிழமை).

பிரிடன் (Britain), ருஷ்யா (Russia).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

தூரக்கிழக்கு (Far East).

ஒரு இடம்.— இந்தியாவிலுள்ள ஒரிஸ்ஸா (Orissa) கடற்கரை.

8—12—44. (வெள்ளிக்கிழமை).

பிரிடன் (Britain), ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு (Far East).

ஒரு தகவலும் இல்லை.

9—12—44. (சனிக்கிழமை).

பிரிடன் (Britain), ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு (Far East).

ஒரு தகவலுமில்லை.

10—12—44 (ஞாயிற்றுக்கிழமை).

பிரிடன் (Britain),

ஒரு தகவலுமில்லை.

ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு (Far East).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

யுத்தக் குறிப்புகள்.

நதிகளில்போர். S. H. A. E. F. தலைமை காரியாலயத்திலுள்ள ராய்ட்டரின் நிருபர் டிசம்பர் 12-ம் தேதியன்று பின்வருமாறு எழுதுகிறார்:—

"ஸார், ரோயர் நதிப்போர் வலுத்துவருகிறது. கெட்ட பருவகாலமும், விமான நடவடிக்கைக்குக் குந்தகமும், தரையில் அநேக அங்குல கனமுள்ள பனி உறைவதும் ஏற்பட்ட போதிலும், போர் கடுமையாகிவருவது தடைபடவில்லை. முக்கியமான இரண்டு இடங்களில் போர் நடைபெற்றுவருகிறது. ஆக்கனுக்குக்கிழக்கிலுள்ள போர்முனையிலுள்ள ஜெனரல் ஹாட்ஜின் 1-வது சேனை கோலோன் சமவெளிக்கு ரக்ஷணையளித்து முட்டுக்கட்டையாகவுள்ள ரோயர் நதிக்குப்போகும் மார்க்கத்தை அடைய ஒவ்வொரு இடமாகப் பிடித்து முன்னேறி வருகிறது. தெற்கிலுள்ள ஜெனரல் பாட்டனின் மூன்றுவது சேனை ஸார் நதியிலுள்ள யுத்த தொழிற்சாலைகளைத் தற்காப்பு செய்யும் ஜெர்மன் தற்காப்புகளைத் தாக்கி நொறுக்கிவருகிறது. முதல் சேனையைச்சேர்ந்தவர்களுக்கு கோலோன் கண்ணுக்குப்புலப்பட்டுவிட்டது. ரோஸாரில் நோக்கி முன்னேறிவரும் குன்றுகளிலிருந்து அவர்கள் ரைன் நகரத்திலுள்ள பெரிய நகரத்தின் தோற்றத்தைக் கண்டுபிடித்துவிட்டார்கள்.

இவ்விதமாக மேற்குப் போர்முனைப் போர் ரைன், ரோர், ஸார் நதிப் போர்களாக மாறி விட்டது. எகிப்துக்கு நைலும், பர்மாவுக்கு ஐராவதியும், சைனாவுக்கு யாங்க்டீஸாங்கும் இருப்பது போல் ஜெர்மனிக்கு ரைன் முக்கியத்துவமுள்ளது. ரைன்நதி யில்லாவிட்டால் ஜெர்மனி அழிந்துவிடும். அதுதான் ஜெர்மனிக்கும் மற்ற நாடுகளுக்குச் செல்லும் முக்கியமான போக்கு வரத்து மார்க்கம். ரைன்-ரோன், ரைன் மார்ன் கால்வாய்கள் அதற்கும் பிரெஞ்சு போக்கு வரத்துக்கும் தொடர்பு ஏற்படுத்துகின்றன. அது 75,000 சதுர மைல்கள் கொண்ட பிரதேசத்தில் வியாபித்திருக்கிறது. ரைன்நதி ஜெர்மனியின் ஜீவாதாரத்துக்கும், வியாபாரத் துக்கும் முக்கியத்துவமுள்ளது, சரித்திரப் புகழ்பெற்ற, கோட்டைகளும் பள்ளங்களு முள்ளது. மேலும் பிரிட்டனுக்கு இங்கிலீஷ் கால்வாயிருப்பதுபோல ஜெர்மனிக்கு ரைன் இயற்கையான எல்லைச்சரக தற்காப்பாகும். இங்கிலிஷ் கால்வாய் அகலமாகயிருந்தபோதிலும் ரைன்நதியின் வேகமும் ஒரு மகத்தான இடையூறுதான். படையெடுப்பவர் அதையும் பொருட்படுத்தவேண்டியதுதான்.

ரைன், ஸார், ரூர், ரோயர் நதி பாயும் பிரதேசங்கள் ஜெர்மனிக்கு முக்கியத்துவமுள்ள நிலக்கரி, எஃகு உற்பத்தி சாலைகள் உள்ள பிரதேசம். இங்கு ஜனமூகமும் உற்பத்தியும் மிகுதியானவை. இங்குதான் ஜெர்மனியின் முக்கியமான ஸ்தானங்களிருக்கிறபடியால் இந்தப் பிரதேசம் விழுந்துவிட்டால் ஜெர்மனிக்கு அதோகதி ஏற்பட்டுவிடும்.

ஆகையால்தான் இதை இழக்கக்கூடாதென்று ஜெர்மனி இங்கு கடும்போரை நடத்தி வருகிறது. ஜெர்மனியிலுள்ள விமான எதிர்ப்பு பீரங்கிகள் இந்திய பிராந்தியத்தின் தற் காப்புக்காகக்-கொண்டுபோகப்படுகின்றன. நதிகளிலுள்ள பாலங்கள் தகர்க்கப்படுகின்றன. தொழிற்சாலைகளிலிருந்து கருங்காட்டுக்கு ஓடின அயல்நாட்டு வேலைக்காரர்களை ஹிம்லரின் S. S. படைகள் வளைத்துக் கைதுசெய்துவருகின்றன. ஜெர்மனி முற்றுகைக்குட்பட்ட கோட்டையைப்போலவும் சரண்புகும் தருவாயிலிருப்பதாகவும் தோன்றுகிறது.

இதேசமயத்தில், மேற்குப் போர்முனையிலுள்ள ஜெர்மன் தளகர்த்தரான வான்ரண்ட் ஸ்டட் 65 டிவிஷன் படைகளுடன் காலதாமதம் செய்வதாக நடவடிக்கைகளை நடத்தி வருகிறார். பிரெஞ்சு ராணுவ அறிக்கை நிலயம் உத்தியோக முறையில் வெளியிட்ட அறிக் கையின் பிரகாரம் சென்ற ஆறு மாதங்களில் ஜெர்மனி 3 மிலியன் போர் வீரர்களை இழந்து விட்டது. அவர்களில் பிரான்ஸில் 1,150,000 பேர்களும், கிழக்குப் போர்முனையில் 1,500,000 பேர்களும், இதாலியில் 3,000,000 பேர்களும் உயிர் துறந்தார்கள். இதைத் தவிர ருமேனியா, பின்லாந்து, பல்கேரியா முதலிய நாடுகளிலிருந்துவந்த 7 லக்ஷம் துருப்புகளை யும் ஜெர்மனி இழந்துவிட்டது. இது இரட்டிப்பு மடங்கு நஷ்டமானதாகவிருக்கும் ஏனெனில் அந்தப்படைகள் நேசதேசக் கக்ஷியில் சேர்ந்துகொண்டு ஜெர்மனியுடன் போரை நடத்திவருகின்றன. மேற்குப் போர்முனையில் மட்டும் ஜெர்மனி 170 டிவிஷன் படைகளை இழந்துவிட்டது. மேலும் 1,000,000 ஸோல்ஜர்களுக்குக் காயம் ஏற்பட்டுவிட்டது. டிசம்பர் 9-ம் தேதியுடன் முடியும் சென்ற மூன்று வாரங்களில் மட்டும் மேற்குப் போர் முனையில் 152,000 பேர்கள் நஷ்டமாகிவிட்டன. தினசரி 6,600 பேர்களை ஜெர்மனி இழந்து வருகிறது.

வான்ரண்ஸ்டெட் அதிக நெருக்கடியிலும், சாமர்த்தியமாகவும் சில சௌகரியங்களுடனும் போர்புரிந்து வருகிறுன். அவனுக்கு ஸீக்பிரட் அரணும், உள்நாட்டு போக்குவரத்துகளும் பருவகாலமும் சாதகமளித்து வருகின்றன. ஆனுல் அவனுடைய சொந்த நாட்டிலேயே தற்காப்புப் போரை நடத்தவேண்டியிருக்கிறது. இதற்கும் பிறருடைய நாட்டில் முன்னேறித் தாக்கும் போரை நடத்துவதற்கும் வித்தியாசமுண்டு. தற்காப்புக்கு மனிதபலம் குறைவாக இருந்தால் போதும், ஆகையால் கூடுமானவரையில் அழிக்கப்பட்டு திருத்தியமைக்கப்பட்ட படைகளுடனும், பொது மக்களிடமிருந்து தயாரிக்கப்பட்ட பயிற்சிக் குறைவுள்ள கிரெனேடியப் படைகளுடனும், வான்ரண்ட்ஸ்டெட் சமாளித்து நிற்பதென்று முடிவு செய்திருக்கிறுன். இவ்விதமாக எதிரிகளைப்பின் துறத்த முடியாமலும் அவர்களின் முன்னேற்றத்தைத் தடுக்க முடியாமலும் இருந்தாலும் அவன் காலஹரணம் செய்துவருகிறுன். இதுவும் நீடித்திருக்காது.

வி வி வி வி வி

ஜெர்மனி பேரில் விமான நடவடிக்கை. இது வலுவடைந்துவிட்டது. டிசம்பர் மாதம் 11-ம் தேதியன்று பிரிடனிலிருந்தும் மத்தியதரைக் கடலிலுள்ள தளங்களிலிருந்தும் 6,000 விமானங்கள் சென்று எதிரியின் பிரதேசத்தில் முக்கியமான எண்ணெய் உற்பத்தி தொழிற் சாலைகளை நொறுக்கின. இந்த விமானங்களில் 1,600 வெடி விமானங்களும், 800 சண்டை விமானங்களும், பிரிடனை விட்டு ஐந்து படைகளாகப் புறப்பட்டு, 16,800 விமானிகளுடன் 3,000 மைல்கள் நீளமுள்ள அமைப்புடன் சென்றன. ஜெர்மன் ரிபோர்ட்டின்படி பழுதுபார்க்கும் வேலை டாட் சங்கத்துக்கும் கஷ்டசாத்தியமாக ஆகிவிட்டது. ஜெர்மனியர்கள் சாதுர்யமாக நகரங்களையும், குடித்தனங்களையும், கடைகளையும், ஆஸ்பத்திரிகளையும் பூமியின் தாழ்வறைகளுக்குள் கொண்டுபோய் அமைத்திருக்கிருர்கள். ஆகாயத்திலிருந்து அபாயம் அதிகரித்திருக்கிறதென்று டாக்டர் கோயபல்ஸ் ஒப்புக்கொண்டிருக்கிருர். டாஸ்ரெக் என்னும் பத்திரிகையில் அவன் பின்வருமாறு எழுதியிருக்கிறுன்.

"நாம் அநேக அபாயங்களையும், கஷ்டங்களையும் எல்லா இடங்களிலும், முக்கியமாக விமான யுத்தத்திலும் அனுபவிக்கவேண்டிவரும். இந்தப் போரில் நமக்கு ஒரு ஆறுதலும் ஏற்படவில்லை. எதிரி விமானங்கள் ஜெர்மனிக்குள் வராமல் தடுக்க நாம் தீவீரமான முயற்சி எடுத்துக்கொண்டு வருகிறோம். இப்பொழுது எதிரி விமானங்கள் தங்குதடையன்னியிலும் அபாயமன்னியிலும் நமது நாட்டிற்குள் வந்து சேருகின்றன."

வி வி வி வி வி

கிழக்குப் போர்முனை. ருஷ்யப் படைகள் ஹங்கேரியின் தலை நகரமான புடாபெஸ்டின் எல்லைச் சரகத்துக்கு வந்துவிட்டன. ஹங்கேரிய நிர்வாகம் நகரத்தைவிட்டு வெளியேறுவதாகத் தெரியவருகிறது. வியன்னுவுக்குப்போகும் மார்க்கம் இப்பொழுது திறக்கப்பட்டுவிட்டது.

வி வி வி வி வி

இதாலியப் போர்முனை. மழையையும் புயல் காற்றையும் பொருட்படுத்தாமல் முன்னேற்றம் நடைபெறுகிறது. மத்தியதரைக்கடல் பக்கத்திலுள்ள விமானப் படை இதாலியப் போரிலும், எதிரி வசமுள்ள ஆஸ்திரியா, தெற்கு ஜெர்மனி போன்ற நாடுகளிலும் முக்கியமான நடவடிக்கைகளை நடத்திவருகிறது. வியன்னுவை நோக்கி முன்னேறும் செம்படைக்கும் உதவியளித்து வருகிறது.

வி வி வி வி வி

லெயிடி. பிலிப்பைன்ஸிலுள்ள லெயிடியில் ஆர்மாக் விழுந்துவிட்டதாகத் தகவல் கிடைத்திருக்கிறது. இங்கு ஜப்பானியர்கள் கடும் போரை நடத்தினுர்கள். அங்கு நவம்பர் மாதத்தில் அபாரமான மழை பெய்ததால் போரை நடத்துவது மிகவும் சிரமமாக இருந்தது. நியூகினியாப் போரில் அவன் ஸ்டான்லி மலைகளில் நடைபெற்றது போல இங்கும் துருப்புகளுக்குச் சில சமயங்களில் விமான மூலம் ஆகாரம் வழங்கப்பட வேண்டியதாயிற்று. ஜப்பானியர்கள் இங்கு முரட்டுத்தனமாகப் போர் புரிந்து வந்தார்கள். குறுகலான கடல்களையும், இருட்டான இரவுகளையும் பயன்படுத்தி அவர்கள் முற்றுகைக்குட்பட்டிருந்த படைகளுக்கு நாசகாரிகள் மூலம் சர்பராக்களையும் உதவிப்படைகளையும் கொண்டு வந்தார்கள். அவர்களுக்குக் கப்பல்கள் குறைந்துவிட்டதென்று நன்கு புலப்படுகிறது. தரையிலிருந்த நேசதேச சண்டை விமானங்கள் ஏழு சாமான் கப்பல் கூட்டத்தை மூழ்கடித்திருக்கின்றன. அவைகள் வெடிவிமானங்கள் கூட இல்லை. எதிரிக்குப் பின்கண்ட நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. 29 சாமான் கப்பல்கள்

(103,000 டன்கள்) 18 துணைக்காவல் கப்பல்கள், 25,000 ஸோல்ஜர்கள் (மூழ்கடிக்கப்பட்டார்கள்). இவைகளுக்குத் தப்பி வந்த கப்பல்கள் ஆர்மாக்கில் சாமான்களை இறக்கும்பொழுது மூழ்கடிக்கப்பட்டன. ஜப்பானிய விமானப்படை மறைந்துவிட்டது. இன்னும் ஜப்பான் லெயிடியில் தொங்கிக்கொண்டிருக்கிறது. இதற்குச் சரியான காரணங்கள் உள. லெயிடிப் போர் தான் பிலிப்பைன்ஸில் முக்கியமான போர். பிலிப்பைன்ஸ் போர் ஜப்பானியப் போருக்கு முக்யத்துவமுள்ளது. லெயிடிப் போரை இழந்தால் ஜப்பானியப் போரையும் இழந்ததாகும். ஜெர்மனியைப் போல ஜப்பானும் அந்திய காலத்தை ஒத்திவைக்க வீண்பாடு பாட்டு வருகிறது.

வி வி வி வி வி

பிரிடிஷ் பஸிபிக் கடற்படை. ஸர் ப்ரூஸ் பிரேஸரின் கீழ் பஸிபிக் போரில் போர் நடத்துவதற்காக ஒரு புதிய சக்தி வாய்ந்த பிரிடிஷ் கடற்படை தயாரிக்கப்பட்டுவிட்டது. பிரேஸர் இதற்குமுன் கிழக்குக் கடற்படையின் தலைவராக இருந்தார். ஸர் ஆர்தர் J. பவரின் கீழ் மற்றொரு கிழக்கு இந்திய கடற்படையும், இந்திய கடற் படையுடன் சேர்ந்துகொண்டு தெற்கு ஆசியா கமாண்டின் பாகமாக வேலை செய்து வரும். இவ்விதமாக ஜப்பானுடன் போரை நடத்த பிரிடிஷ் கடற்படையின் ஒரு பாகம் அனுப்பப்படுமென்று சர்ச்சில் சொன்ன வாக்குறுதியை நிறைவேற்றும் முறையில் கிழக்கு பிரதேசத்தில் இரண்டு கடற்படைகள் நடமாடும். டிர்பிட்ஸ் மூழ்கடிக்கப்பட்டு விட்டதால் பிரிடிஷ் கடற் படையில் சிலவற்றை இங்கு அனுப்பலாம். இதே சமயத்தில் மிகவும் மகத்தான யுத்தக் கப்பலும் மிதக்க விடப்பட்டிருக்கிறது. மிஸ்டர் A. V. அலெக்ஸாண்டர் சொல்லுகிறபடி அந்தக் கப்பல் உஷ்ணரேகை செல்லும் பிரதேசங்களுக்குச் சென்று அங்கு நமது குறிப்பான எதிரிகளைத் தாக்கிவரும்.

பஸிபிக் பிராந்தியத்திலிருந்த அபாயத்தின் முதல் கட்டம் முடிந்துவிட்டது. பிரின்ஸ் ஆப் வேல்ஸ், ரிபல்ஸ், ஹெர்மிஸ் போன்ற கப்பல்கள் மூழ்கிய காலமும் இந்தியாவுக்கு ஆபத்து நேரிடும் போலிருந்த சமயமும் போய்விட்டன. சிறிது காலம் வரையில் பிரிடிஷ் கடற்படை அட்லாண்டிக் கடல், மத்திய தரைக்கடல் போரில் ஈடுபட வேண்டியிருந்தது. தூரக் கிழக்கு சமுத்திரங்களுக்கு பிரிடிஷ் கடற் படையின் வருகை பகட்டாக இல்லாவிட்டாலும் இதற்கு முன் அநேக நடவடிக்கைகள் சம்பவித்திருக்கின்றன. அவைகள் பின்வருமாறு :—

சுமத்ராவிலுள்ள எண்ணெய்ப் பிரதேசம் தாக்கப்பட்டது. அந்தமான், நிகோபார் தீவுகள் வெடி குண்டுகளால் தாக்கப்பட்டன. மர்பியாத் தீவுகளில் படைகளிறங்கின. ரெங்கூனுக்குச் சென்ற 62 ஜப்பானியக் கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன.

அப்ஸர்வர் பத்திரிகை பின்வருமாறு சொல்லுகிறது :—

“தூரக்கிழக்குக் கடற்படை பர்மாவையும், மலேயாவையும் பிடிப்பதுடன் நின்றுவிடாது. போர்னியோ, ஹாங்காங், ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து, சைனா, டச்சு கிழக்கிந்தியத் தீவுகளையும் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு அதற்கு இருந்த போதிலும் பிரிடிஷ் கடற்படையின் முக்கியத்துவம் பஸிபிக் போரில் தவிர்க்க முடியாததென்பது நன்கு வெளிப்பட்டு விட்டது. தனித்து நின்று ஜப்பானிய கடற்படையை சமாளித்து நிற்பதற்கும் அது சக்தி வாய்ந்தது.”

வி வி வி வி வி

பர்மா. அக்குள்ள சேனை சாவதானமாக முன்னேற்றமடைந்து வருகிறது. சமீப காலத்தில் காயா, இண்டா, பூதேடாங்கு முதலியவைகள் பிடிபட்டன. நேசதேசப் படைகள் தெற்கு நோக்கி அநேக கவருகளாக முன்னேறுகின்றன. சிண்ட்வின் பிராந்தியத்தில் படைகள் ஷ்வேகின் ஆ பள்ளத்தாக்கை நோக்கி முன்னேறுகின்றன. அரக்கானில் காலடான் நதிப் பள்ளத்தாக்கில் நெருக்கடி அதிகரித்திருக்கிறது. இவ்விதமாக 700 மைல்கள் கொண்ட போர் முனையில், அதாவது ஐரோப்பிய போர் முனையைப்போல் இரண்டு மடங்குள்ளது. இந்தியா, பிரிடிஷ், சீன பர்மிய, ஆஸ்திரேலிய, கிழக்கு ஆபிரிக்கா, மேற்கு ஆபிரிக்கா போன்ற 50 தேசத்தவர்களடங்கிய ஒன்றுபட்ட விடுதலை சேனை காட்டு மிருகங்களும், தொத்து வியாதிகளும் உள்ள வட பர்மா காடுகளில் போரை நடத்தி வருகிறது. இந்தப் பல்வேறு தாக்குதல்கள் மூலம் எதிரி கொஞ்சம் கொஞ்சமாக துரத்தியடிக்கப்படுகிறான். ஆகிலும் அவன் உறுதியுடன் போர் புரிந்து கடைசியில்தான் பின்வாங்குகிறான். ஆனால் பிரிடிஷாருக்கு நெருக்கடியாக இருந்த சமயம் போய்விட்டது. வடக்கு பர்மாவில் மலைப் பிராந்திய பூமியில் வெற்றிக்குப் பின் சிண்ட்வின் நதிக்கும் ஐராவதி நதிக்குமிடையிலுள்ள சமவெளிகளுக்கும் மாண்டலேயிக்கும் கடும் போர் நடப்பதால், ரெங்கூனுக்குப் போகும் ரஸ்தாவும் கூடிய சீக்கிரம் திறக்கப்பட்டுவிடும். இந்தப் பிரதேசத்தை நோக்கி பாமோ, காதா, கலிவாவிலிருந்து மூன்று பகுதிகளாகப் படைகள் முன்னேறுகின்றன.

சைனு. குவேசௌ மாகாணத்தில் ஜப்பானியரின் முன்னேற்றம் தடைபட்டு விட்டது. மார்ஷல் சியாங்கே ஷேக். ராணுவ அலுவல்களை மட்டும் கவனிக்கும் எண்ணத்துடன் மிஸ்டர் T. V. சூங்க் நிர்வாகத்தின் தலைவராக நியமிக்கப்பட்டிருக்கிறார். சுங்கிங்கில் ஜனாதிபதி ரூஸ்வெல்டின் சொந்த பிரதிநிதியாகவுள்ள மிஸ்டர் டொனால்ட் நெல்ஸன் சைனா நிர்வாகத்துக்கு பொருளாதார ஆலோசகாராக நியமிக்கப்பட்டிருக்கிறார். அவர் சீனாவில் யுத்த தளவாட உற்பத்தி சங்கத்தை அமைக்க முதலில் ஆலோசனை கூறுவார்.

இவ்விதமாக யுத்தப் போக்கு துரிதமாக நடைபெற்று வருகிறது. ஐரோப்பியப் போர் நடைபெறும்பொழுது இதற்கு மேல் எதிர் பார்க்க முடியாது. மன்னர் சொல்லுகிற மாதிரி எதிரி இந்தியாவிலிருந்து துறத்தியடிக்கப்படுகிறான். அமெரிக்கர்கள் பஸிபிக்கில் ஜப்பானியர் வசமுள்ள பாக்கித் தீவுகளிலிருந்து எதிரியை பின்புறம் தள்ளிக்கொண்டு வருகிறார்கள். இப்பொழுது, பிரிடிஷ் சாம்ராஜ்யம், அமெரிக்கா, சைனா, ஹாலந்து, பிரான்ஸ், முதலிய நாடுகளிருந்து வந்துள்ள படைகளுடன் ஜப்பானியப் போரில் ஈடுபட்டிருக்கும் பிரிடிஷ் படைகளை கூடிய சீக்கிரத்தில் பலப்படுத்துவோம்.”

வி வி வி வி வி

சமாதான பிரச்னைகள். அடிமைப்பட்டிருந்த நாடுகள் விடுவிக்கப்பட்டும், வெற்றியும், சமீபத்தில் கிடைத்துவிடு மென்று தோன்றுவதால் ஐரோப்பிய விஷயங்கள் ராணுவ முறையைவிட்டு ராஜீய, ஜன சமூக, பொருளாதார முறைகளை அவலம்பித்துவிட்டன. அவைகளில் முக்கியமாக ஜனங்களுக்கு ஆகாரம் அளிப்பது முக்கியமான பிரச்னை. எதிரிகள் பொசுக்குவேலையைத் திறமையுடனும் காட்டுமிராண்டித்தனமாகவும் நடத்தியிருக்கிறார்கள். மேலும் எதிரியை எதிர்த்துப் போராட அமைக்கப்பட்ட ஸ்தாபனங்கள், திடீரென்று தங்களுடைய வேலை முடிவடைந்தபின் கலைந்துபோக மறுக்கின்றன அல்லது தேசத்தின் சாதாரணமான சமாதான வாழ்க்கைக்கு உதவியளிக்க மறுக்கின்றன. யுத்த காரணமாக ஏற்பட்ட கக்ஷிகள் ராஜீயக் கக்ஷிகளின் அந்தஸ்த்தை அடைந்து ஸ்திரமான நிர்வாகத்துக்குப் பொருத்தமில்லாத விரோதங்களையும், மனத்தாங்கல்களையும் கொண்டாடுகின்றன. நேசதேசத்தார்களுக்கு இதைத் தவிர முக்கியமான அலுவல் கையிலிருக்கிறது. சில சமயங்களில் பலாத்காரத்தை உபயோகித்தும்கூட இந்த யுத்தத்தில் அவர்களுக்குப் பொறுப்பு இருக்கிறதென்று அவர்களுக்கு ஞாபகப்படுத்தவெண்டியிருக்கிறது. அவர்கள் உதவி செய்யாவிட்டாலும் உள்நாட்டுக் கலகங்களினால் யுத்த முயற்சிக்கு இன்னல்கள் ஏற்படுத்தவோ, அவைகளை வேறு வழியில் திருப்பவோ முயற்சிக்கக்கூடாதென்றும் சொல்லவேண்டியிருக்கிறது.

வி வி வி வி வி

கிரேக்க நெருக்கடி. பெல்ஜியம், பிரான்ஸ், இதாலியுள்ள இந்த பிரச்னைகள் கிரீஸில் வலுத்துவிட்டன. மெடிக்ஸாஸ் காலம் முதல் ஜெர்மன் ஆக்கிரமண காலத்திலும் இதாலியில் அநேக கொரில்லாப் படைகள் அமைக்கப்பட்டிருந்தன. கிரேக்க பொதுஜன விடுதலை சேனை (E. L. A. S.), கிரேக்க ஜனநாயக விடுதலை சேனை (E. D. E. S.), தேசிய விடுதலை முனை (E. A. M.), மலைகளிலுள்ளவர்களின் கமிட்டி (P. E. E. T.), ஆகிய கக்ஷிகள் கெயிரோவிலுள்ள கிரேக்க நிர்வாகத்தினிடமிருந்து அதிகாரத்தை ஜனநாயக முறையிலில்லாமல் கலகம் செய்து பெற முயன்று வந்தன. பிரிடிஷ் பிரதிநிதிகள் சபையில் டிசம்பர் 8-ம் தேதியன்று நடைபெற்ற விவாதத்தில் மிஸ்டர் சர்ச்சில் சொன்ன பிரகாரம் இது ஜனநாயகமில்லை. ராஜீய முறையில் இடையூறாகயுள்ள எவரையும் சுட்டுக் கொன்றுவிடுவது ஜனநாயகமல்ல. ஆனால் கொள்ளைக்கூட்டத்தார் ஆரம்பிக்கும் எந்த நடவடிக்கையும் ஜனநாயகத்தின் வேஷம், பரிகாசம். ஜனநாயகம் வோட்டுஉரிமையால் நிலைபெற வேண்டுமே யல்லாது ரகசியமான வெடிகுண்டு வீச்சினால் நிலைபெறக்கூடாது.

விவாத சமயத்தில் மிஸ்டர் சர்ச்சிலும், மிஸ்டர் ஈடனும் சொன்ன இந்த விஷயங்களைக் கண்டு பிரதிநிதிசபை அவர்களிடம் நம்பிக்கைத் தீர்மானத்தை 279 பேர் சாதகமாகவும், 30 பேர் பாதகமாகவும் நிறைவேற்றிற்று. இது கிரீஸுக்கு மட்டுமில்லாமல் மற்ற தேசங்களிலுள்ளவர்களுக்கும் இந்தியாவில் தப்பெண்ணம் கொண்டிருக்கிறவர்களும், சுதந்திரத்தின் நண்பர்கள் என்று சொல்லுகிறவர்களுக்கும் அன்வயிக்கும். தொழிலாளர் கக்ஷியைச் சேர்ந்த Mr. F. S. காகஸ் பொருப்பற்ற முறையில் பின்வருமாறு சொன்னார் “இன்று ஆதென்ஸின் புனிதமான பூமியில் அக்ராபாலிஸின் நிழலில் பிரிடிஷ் ஸோல்ஜர்களும், கிரேக்க தேசாபிமானிகளும் நேசதேச வெடி குண்டுகளால் உயிர் துறந்து கிடக்கிறார்கள். இவ்விதமான சகோதரர்களுக்குள் நடைபெறும் போரை உடன்காலத்திலேயே நிறுத்தவேண்டுமென்று நான் பார்லிமெண்டுக்கு சிபார்சு செய்கிறேன். சில காலமாக பிரிடன் ஐரோப்பாவில் உபயோகமற்ற

அநேக பழைய ராஜ்யங்களுக்கு உதவியளிக்க ஆரம்பித்துவிட்டது." பிரிடன் விலகிநின்றால் இந்த சுதந்திர நண்பர்கள் ஹூணஜாதியாரின் மற்றொரு அலையினால் அடித்துக்கொண்டு போகப்படுவார்கள் என்பதை மறந்து விடுகிறார்கள்.

வி வி வி வி வி

இந்தியாவின் வியாபாரக் கப்பல்கள். டப்ரின் பயிற்சிக் கப்பலுக்கு டிசம்பர் 7-ம் தேதி யன்று விஜயம் செய்த மாட்சிதங்கிய வைஸ்ராய் அவர்கள் உதவிப் படைகளையும், சர்பராக்களையும் கடல் தாண்டி எடுத்துச் செல்வதன் மூலம் யுத்தத்திற்கு சாமான் கப்பற் படை செய்துவரும் பேருதவியைப்பற்றியும் பாராட்டிவிட்டு அந்தக் கப்பலில் பயிற்சி பெறும் வாலிபர்களுக்கு உத்சாகம் ஊட்டும் முறையில் ஒரு சொற்பொழிவாற்றினார். அது பின்வருமாறு.

"நீங்கள் ஏற்றுக்கொண்டிருக்கும் உத்தியோகத்தைப் பற்றி நான் சொல்லவிரும்புகிறேன். நீங்கள் மகத்தான சேவையில் ஈடுபட்டிருக்கிறீர்கள். கடற்படை சேவையும், வைத்தியத் தொழிலும் தான் நாகரிகத்திற்கு பேருதவி செய்திருக்கின்றன. இரண்டு சேவைகளும் மிகவும் சிரம சாத்யமானவை. இரண்டும் மானிடவர்க்கத்திற்கு உபயோகமுள்ளவை. மாலுமியின் துணிவின் மூலம் கடல் மூலமாகச் செய்யப்பட்ட வியாபாரம் உலகத்தின் நாகரீகப் போக்கின் முன்னணியில் நிற்கின்றது.

இந்தியாவுக்கு சாமான் கப்பற்படை மிகவும் முக்கியத்துவமுள்ளது. இந்தியாவைவிட அதிக நீளமுள்ளதான, போக்கு வரத்துக்கு லாயக்குள்ள கடற்கரையை ஆஸ்திரேலியாவும் அமெரிக்காவும் தான் பெற்றிருக்கின்றன. தேச படத்தில் ருஷ்யாவுக்கும் கனடாவுக்கும் அதிக நீளமுள்ள கடற்கரை இருப்பதாகக் காணப்படலாம். ஆகிலும் அவைகள் பனிக்கட்டி நிறம்பியிருப்பதால் வியாபாரத்துக்கு உபயோகமற்றவைகள். ஆகையால் இந்தியாவிற்கு இந்திய மாலுமிகள் கொண்ட ஒரு கடற்படை இருக்கவேண்டியது மெத்த அவசியமானது. இந்த வருஷத்தில் டப்ரின் கப்பலில் பயிற்சிபெற ஏராளமான மாணவர்கள் வந்திருக்கிறார்களென்று அறிய நான் சந்தோஷமடைகிறேன்.

கடைசியாக இந்தக் கப்பலில் நீங்கள் ஆத்மீக, பௌதீக, தொழிற் பயிற்சி சம்பந்தமாக அடைந்திருக்கும் பயிற்சிகளின் தேர்ச்சியைக் கண்டு உங்களைப் பாராட்டுகிறேன். உங்களுடைய சேவையில் மற்றெல்லாவற்றையும் விட நல்ல நடத்தை தான் அவசியமென்பதை நீங்கள் உணருவீர்களென்று நம்புகிறேன். கடற்படையில் பலஹீனமுள்ளவர்களுக்கும் கோழைமனதுள்ளவர்களுக்கும் இடமில்லை. அநேக வருஷங்களுக்குமுன் வட மேற்கு எல்லைச் சரகத்தில் வாலிபமுள்ள ஆபீஸராக இருந்த பொழுது, பதான் ஜாதியார்கள் தான் சில்லரை தந்திரங்களில் அனுபவமுள்ள பரீக்ஷாதிகாரி என்று நினைத்தேன். அவன் எப்பொழுதும் கண்காணிப்புச் செய்து வந்தான். அஜாக்கிரதையும், சஞ்சல புத்தியையும் அவன் கண்டிக்காமலிருக்கமாட்டான். உன்னுடைய முடிவுகள் சீக்கிரமாக நடைபெறவேண்டுமென்பதற்காக அவன் துரிதமான முடிவுக்கு வந்திருப்பான். ஆகிலும் ஒருவனுடைய குணத்தைப் பரிசோதிப்பதில் கடல் தான் சிறந்த பரீக்ஷாதிகாரி என்று நினைக்கிறேன். பலஹீனமும், ஆலச்யமும், திடக்குறைவும் கண்டு பிடிக்கப்பட்டு வெகு சிக்கிரத்தில் சிக்ஷிக்கப்படும். கடல் வாழ்க்கை மிகவும் கஷ்டமானது. லதீன் கவியான ஹோரேஸ் பின்வருமாறு சொன்னார். "கடலுக்குச் செல்லும் மாலுமியின் ஹிருயத்தைச் சுற்றி ஓக்கும் பித்தளையிடம் அமைக்கப்பட்டிருக்கவேண்டும்." அதை இப்பொழுது தேக்கும் கெட்டியான எஃகும் என்று சொல்லவேண்டும். உங்களுக்குப் பயிற்சியிலும் கடல் பிரயாணத்திலும் அதிருஷ்டம் கிடைக்குமென்று நான் ஆசிகூறுகிறேன். உங்களுக்கு நல்ல சேவையில் சிறந்த சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கிறது.

வி வி வி வி வி

புதுக்கோட்டையில் யுத்த சட்ட திட்டங்கள். சர்க்கரை, சர்க்கரை பண்டங்களை இறக்குமதியும் ஏற்றுமதியும் அனுமதியன்னியில் செய்யக்கூடாதென்று புதுக்கோட்டை நிர்வாகம் தடை செய்திருக்கிறார்கள். உணவுப்பொருள் சம்மந்தமாக மற்றொரு உத்தரவையும் பிறப்பித்திருக்கிறார்கள். அதன்படி ரூ. 20 அல்லது அதற்கு மேற்பட்ட கிஸ்தி செலுத்தும் நில ஸ்வான்தார்கள் அறுவடைக்குப் பின் ஒரு மாதத்திற்குள் எவ்வளவு மகசூல் என்றும், தங்களுடைய சாப்பாட்டிற்கும் சாகுபடிக்கும் எவ்வளவு தான்யம் தேவையென்றும், சாகுபடிச்செலவு என்ன நேர்ந்ததென்றும் ஒரு ஸ்டேட்மெண்டை தாக்கல் செய்யவேண்டும். மேலும் அவர்களிடமுள்ள உபரிப் பொருள்களை பத்திரப்படுத்திவைத்து கவர்ன்மெண்டார் அவர்கள் உத்திரவின் பிரகாரம் விற்றுவிடவேண்டும். மற்றொரு விளம்பரம் மூலம் 1944-ம் வருஷம் டிசம்பர் மாதம் 31-ம் தேதிக்குப்பின் 1945-ம் வருஷம் ஜனவரி மாதம் 1-ம் தேதிக்குமுன் உற்பத்திசெய்யப்பட்டு

மூட்டை கட்டப்பட்ட எந்த நூலையும்துணியையும் வாங்குவதோ, விற்பதோ அல்லது வைத்திருப்பதோ, கூடாதென்றும், அவைகளை அவைகளின் பேரில் குறிக்கப்பட்ட தேதியிலிருந்து ஒரு வருஷத்திற்குள் விற்றுவிடவேண்டுமென்றும், அவ்விதம் செய்யத் தவறினால் அது குற்றமாகுமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. மற்றொரு உத்திரவின் பிரகாரம் கவர்ன்மெண்டார் நிர்த்தாரணம் செய்திருக்கும் ரேட்டுக்கு அதிகமான விலைக்கு மோட்டாரின் பாகங்களை விற்கக்கூடாதென்றும் தடைசெய்திருக்கிறார்கள்.

அணி அணியாக விமான நடவடிக்கை.

ஜெர்மனியைத் தாக்குவதில் நேசதேச விமானப்படையின் திட்டம்.

(விங் கமாண்டர் L. V. பிரேசர்.)

ஜெர்மனிபேரில் நடவடிக்கை எடுத்துக்கொள்ளும் நேசதேச விமானங்களின் விமானத் தாக்குதல்களின் வெற்றிகரமான விளைவுகளைத் தாக்கப்பட்ட லக்ஷியங்களின் ஜாபிதாவையும், அல்லது சுட்டு வீழ்த்தப்பட்ட எதிரியின் விமானப்படை சங்கியையும் கவனித்தால்மட்டும் போதாது. வெளிவந்திருக்கும் அறிக்கைகளும் புள்ளி விவரங்களும் நமது கவனத்தைக் கவருகின்றன.

விரிவான திட்டம் போடப்பட்டு அது ஏற்பாடாக நடைமுறையில் கையாளப்பட்டதென்பதை அவைகள் குறிப்பிடுகின்றன. விமானப் போர் எந்த ஸந்நிவேசத்தில் நடைபெறுகிறதென்று நுட்பமான அறிவுள்ளவர்கள்தான் சமாளித்துக்கொள்ளவேண்டிய சிரமங்களை அறியமுடியும்.

ஜெர்மன் எல்லைச்சரகத்துக்கு சமீபத்தில் முன்னணி தளங்களிலிருந்து தாக்கிவரும் பிரிடிஷ் அமெரிக்க டாக்டிகல் விமானப்படைக்குத்தான் அதிக சிரமங்கள் ஏற்பட்டுள்ளன. இந்த பருவ காலத்திலும் சிரமசாத்தியமான பிரதேசத்திலும் அசாத்தியமென்று நினைக்கக்கூடிய நிலைமையில் விமானங்கள் பறந்து செல்லுகின்றன. விமானிகளும், தரைப்படைகளும் வாசம்செய்து வேலை செய்துவருகிறார்கள்.

ஹாலந்திலுள்ள பிரிடிஷ் விமானப்படையின் இரண்டாவது டாக்டிகல் படையின் முன்னணி விமானத் தளங்களை உதாரணமாக எடுத்துக்கொள்ளுவோம். ஆகாயத்திலிருந்து விமானத் தளங்களை உற்று நோக்கினாலும் அல்லது தரையிலிறங்கும்பொழுது பார்த்தாலும் அங்கே ஒரு மகத்தான குப்பைக் குவியலிருக்குமென்று தோன்றக்கூடும். பூமியில் பிளவுகளும், பலவிதமான குப்பைகளும், தவிடுபொடியான கட்டடங்களும் எங்கு பார்த்தாலும் காணப்படுகின்றன.

ஆகிலும் ஸ்பிட் பையர், டெம்பஸ்ட், டைபூன் என்னும் விமானங்கள் ஜலமுள்ள குழிகளை ஒதுக்கி சதுப்பு நிலங்களில் சென்று ஓடு பாதைகளிலிருந்து புறப்படுகின்றன. தரைப் படைகளுக்கு உதவி செய்ய அவைகள் கால நிலைமையில் சிறிது சௌகரியமேற்படும்பொழுது நடவடிக்கையைத் துவக்குகின்றன.

இந்த உதவி வெற்றிகரமாக நடைபெறுவதற்கு, விமானிகளின் சாதுர்யமும், விமானங்களின் சிலாக்கியமான அமைப்பும் ஒருபுறமிருந்தாலும் கங்காருவைப்போல தாவிச்சென்று நார்மண்டியிலிருந்து பிரான்ஸ், பெல்ஜியம் வழியாக ஜெர்மனியின் மேற்கு எல்லைச்சரகத்திலுள்ள ஹாலந்திற்கு முன்னேறியதும்தான் காரணமாகும். ஹாலந்திலுள்ள விமானத் தளங்களில் ஒன்றைப் பிடித்தபொழுது விமானதளத்தைச் சீர்படுத்தும் படையினரில் ஒருவர் சொல்லியது விமானத் தளத்தின் நிலமையை நன்கு விளக்குகிறது. "பாழான தோற்றமுள்ள இடத்தைப் பார்க்கவேண்டுமானால் இங்குதான் அதைக் காணக்கூடும்" என்று அவர் சொன்னார்.

நேசதேச வெடிகுண்டுகள் ஓடும் வழிகளை நொருக்கிவிட்டன. தரையில் பிளவுகளை உண்டுபண்ணின. எதிரியின் காலம் கடந்து வெடிக்கும் வெடிகுண்டுகளும் விமானம் தங்கும் இடங்களையும் கட்டடங்களையும் நொருக்கிவிட்டன. மழையும் வெள்ளப்பெருக்கும் அழிவைப் பூர்த்திசெய்துவிட்டன. விமானமிறங்கும் இடங்கள் துரிதமாக சமமாக்கப்பட்டு தண்ணீர் இறைக்கப்பட்டன. விமானங்கள் பறந்து செல்லும்பொழுது மற்ற பாகங்களும் சீர்படுத்தப்பட்டன.

சமீப காலத்தில் விமானிகளும் தரைப்படைகளும் கூடாரங்களைவிட்டு வெளியேறிவிட்டார்கள். அவர்களுக்கு சமீபத்திலுள்ள கிராமங்களில் இட வசதி கிடைத்துவருகிறது. அவர்கள் கட்டைகளின்பேரில் ஓடக்கூடிய குடிசைகளையும் அமைத்திருக்கிறார்கள். சகதி

அதிகமாகிவிடும்பொழுது அவைகளை வேறு இடங்களுக்குச் சுலபமாக இழுத்து சென்று விடலாம். பிட்டர்களும், ஆயுதங்களைப் பழுதுபார்க்கிறவர்களும், கவசம் ரிப்பேர் செய்கிறவர்களும் தண்ணீரிலும், சகதியிலும் கடந்துசென்று விமானங்களை கவனித்துவருகிறார்கள். அவர்களும் விமானிகளும் தங்களுக்கு ஏற்பட்ட அசௌகரியங்களைப்பற்றி பரிகாசம் செய்து கொண்டே தங்களுடைய வேலைகளைப் பூர்த்தி செய்கிறார்கள்.

இவ்விதமாக டாக்டிகல் விமானப்படையின் நடவடிக்கை நடைபெற்றுவருகிறது. பகல் காலத்தின் குறைவு நேரமும் அடிக்கடி வரும் மூடுபனியும் நடவடிக்கையை சிறிது பாதிக்கின்றன. இதைத் தவிர பிரிடிஷ் பாம்பர்படையைச் சேர்ந்த விமானங்கள் தொழிற் சாலைகளை பலமாகத் தாக்கிவருகின்றனவென்றும், லங்காஸ்டர் விமானங்கள் டார்ட்மண்ட் எம்ஸ் கால்வாயையும், எம்ஸ் வேளர் கால்வாயையும் உடைத்துவிட்டனவென்றும், அமெரிக்க பறக்கும் கோட்டைகளும் லிபரேட்டர்களும் ரயில் வண்டிகள் தங்குமிடங்களையும் முக்கிய மான எண்ணெய் தொழிற்சாலைகளையும் நொருக்கினவென்றும், மற்றும் நடந்த விமானப் போரில் ஜெர்மனி 200 சண்டை விமானங்களை இரண்டு நாட்களில் இழந்ததென்றும் கேழ்விப் படுகிறோம்.

இவையெல்லாம் விமான நடவடிக்கையில் புதிய முறையை ருசிப்பிக்கின்றன. நாம் இது வரையில் அணி அணியாகவுள்ள தற்காப்பு என்று கேழ்விப்பட்டிருக்கிறோம். அதை மாற்றி நாம் அணி அணியான தாக்குதல் என்று சொல்லவேண்டும். இதைத்தான் நேசதேச விமான நடவடிக்கை வெளிப்படுத்தியிருக்கிறது.

விரிவாகச் சொல்லப்போனால், மேற்கில் மூன்று அலைகள்போல இங்கிலாந்து, பெல்ஜியம், ஹாலந்து வழியாக விமானத் தாக்குதல் நடைபெறுகிறது.

முதலாவது டாக்டிகல் விமானப்படை—அதில் சண்டை விமானங்களும், சண்டை வெடி விமானங்களும்—ஜெர்மனியின் மேற்குச் சுவரின் நீண்ட பிறைவடிவமான பாகத்துக்கு சமீபத்திலுள்ள முன்னணி தளங்களிலிருந்து தாக்கிவருகின்றன. அதற்கு அடுத்தாற்போல் ஐரோப்பிய தளங்களிலிருந்து நடுத்தரமான வெடி விமானங்கள் தாக்கிவருகின்றன. அவைகளுக்கு அடுத்தாற்போல் இங்கிலாந்திலுள்ள கனமான வெடி விமானங்கள் வெகுதூரம் சென்று இரவு பகலாகத் தாக்கிவருகின்றன.

ஐரோப்பாவிலேயே நடுத்தரமான விமானங்கள் இருப்பதினால் ஜெர்மனியையே தாக்கக் கூடிய நிலைமை ஏற்பட்டுவிட்டது. நடுத்தரமான வெடி விமானங்கள் படை வரிசைகளுக்கு சமீபத்திலுள்ள ஸப்ளை தளங்களுக்குச் செல்லும் ரஸ்தாக்களையும், இருப்புப்பாதை பாலங்களையும் நொருக்கி போக்குவரத்துக்களைத் தடை செய்துவந்தன. இங்கிலாந்திலிருந்து செல்லும் கனமான வெடி விமானங்கள் கோலோன் என்ற லக்ஷியத்தையும், தூரத்திலுள்ள மியூனிச்சையும் தாக்கிவருகின்றன.

இவ்விதமான பலமான தாக்குதல்தான் டாக்டிகல், ஸ்ட்ராடஜிகல் விமான நடிவடிக்கையை விமான நடவடிக்கைக்கு அசௌகரியமாக உள்ள இந்தப் பருவ காலத்திலும் தங்குதடையன்னியில் நடத்தும்படி சாதகம் அளித்துவருகிறது. இந்தத் திட்டம் மூலம் விமானிகளுக்கும் ஸோல்ஜர்களுக்கும் நெருங்கிய ஒத்துழைப்பு ஏற்பட்டிருக்கிறது. ஒவ்வொருவரும் மற்றொருவரின் அவசியத்தை உணருகிறார்.

இதைத் தடுக்க எதிரி என்ன நடவடிக்கையை மேற்கொண்டிருக்கிறான்? மனமில்லாத ஜெர்மன் விமானப்படை போருக்குக் கட்டாயத்தின்பேரில் அனுப்பப்படுகிறது. அவற்றில் சுழல் வாயுவால் ஓட்டப்படும் விமானங்களும் சேர்ந்திருக்கின்றன. மேலும் ஜெர்மனியிடம் பறக்கும் வெடி குண்டுகளும் அவுட் வானங்களுமிருக்கின்றன. ஆகிலும் இந்த ஆயுதங்கள் யுத்தத்தின் போக்கை கொஞ்சம்கூட மாற்றக்கூடமுடியாது. மேலும் நேசதேச விமான நடவடிக்கை திட்டத்தை எடுத்துப்போராட ஜெர்மனியிடம் போதுமான சக்தியுமில்லை.

ஆறு மாதங்களில் 250,000 டன்கள் மொத்த எடையுள்ள வெடிகுண்டுகள்.

ஜெர்மனிபேரில் விமான நடவடிக்கை.

ஜார்ஜ் பைப்.

(டெயிலி டெலிகிராப்.)

சமீப எதிர் காலத்தில் ஹிட்லர் அவனுடைய கடைசியான ரகசியத்தை வெளியிடும்படியான நிர்பந்தம் எற்பட்டுவிடும். இது அவன் பெருமை பாராட்டக்கூடியதல்ல. ஏனெனில்

ஜெர்மனிபேரில் ஏற்பட்ட வெடிகுண்டு வீச்சினுல் எவ்வளவு நஷ்டம் ஏற்பட்டதென்பதுடன் அது சம்பந்தமுள்ளது.

எதிரியின் விமான நடவடிக்கையின்பொழுது ஜன நெருக்கமுள்ள நகரங்களின் புனருத்தாரண சக்தி மிகவும் அபாரமென்ற அனுபவம் நமக்கு ஏற்பட்டது. ஜெர்மனியின் மகத்தான வெடி விமானக் கூட்டங்கள் பலமாக லண்டனைத் தாக்கியபோதிலும் லண்டன் எப்பொழுதும் போல சுறுசுறுப்பாகவேயிருந்தது.

இதை மனதில் வைத்துக்கொண்டு விமான நடவடிக்கையின் மூலம் நாம் ஜெர்மனியை முடமாக்கக்கூடுமோவென்பதைப்பற்றி அநேகர்களுக்கு சந்தேகமேற்பட்டது. நெடும் போக்கெடுத்துக்கொண்டு அதை அமூல் நடத்துவதில் ஒருபொழுதும் பின்வாங்காத நமது விமானப் படைத் தலைவர்களின் புத்தி விசாலத்தை அவர்கள் கொஞ்ச காலம் கிரமித்துத்தான் அறிந்து கொள்ள முடியும்.

ஜெர்மனி சேனைக்கு உதவி புரிவதற்காக விமானப்படையைத் தயாரித்தது. இதுதான் அவர்களின் நாசகாரியாக ஆகிவிட்டது. நம்முடைய நிபுணர்கள் விரிவான நோக்கங்களுடன் விமானப்படை அமைப்புத் திட்டத்தை நிறுவினுர்கள். நம்முடைய விமான நடவடிக்கை எதிரிகளின் மனதில் பீதியை உண்டாக்கும் அறுகுறையான முயற்சியில்லை. எதிரியின் தொழிற்சாலைகளை அழித்துவிட வேண்டுமென்ற யுத்த தந்திரத்தில் மிகவும் ஜாக்கிரதையுடன் அபிவிருத்தி செய்யப்பட்டவை. நம்முடைய லக்ஷியங்கள் ஸ்பஷ்டமாக நிர்ணயிக்கப்பட்டவை.

சில முக்கியமான விஷயங்களைத் தவிர, யுத்த தளவாடங்களை உற்பத்தி செய்து வந்ததும் 2 லக்ஷம் ஜனத்தொகை உள்ளதுமான ஜெர்மனியின் 30 நகரங்களுக்குள் 25 நகரங்கள் தாக்குதலுக்காகப் பொறுக்கி எடுக்கப்பட்டன. இந்த நகரங்களெல்லாம் ஸ்டெட்டியிருந்து லீப்ஸிக் வரையில் வரையப்பட்ட கோட்டுக்கு மேற்குப் பக்கத்தில் நமது வெடி விமானங்களின் குண்டு வீச்சு வட்டாரத்துக்குட்பட்டவை. இரவுகளில் மகத்தான தாக்குதலைச் செய்யக்கூடிய விமானப் படையை நாம் சகஜமாக கொஞ்ச நாட்களில்தான் தயாரிக்க முடிந்தது. நாம் முன்னேற்றமடைய ஜெர்மானியர்கள் அவர்கள் எதிர் பார்ப்பதற்கு மாறுக நிலைமை மோசமாகிவிட்டதென்று கண்டுபிடித்தார்கள். ஜெர்மன் விமானப்படை சேனையுடன் ஒத்துழைக்கத்தான் தயாரிக்கப்பட்டிருந்தது. இப்பொழுது அவர்கள் அவசர அவசரமாகப் புதிய முறைகளைக் கையாள வேண்டியதாயிற்று. அவர்களிடம் இரவு சண்டை விமானங்கள் கிடையாது. இந்த முறையில் அவர்களுக்குக் குந்தகம் ஏற்பட்டது.

அவர்கள் நிலைமையை ஒருவாறு சீர்படுத்தியபொழுது அமெரிக்க விமானப் படை பகலில் பலமாகத் தாக்க ஆரம்பித்து நிலைமையில் சிக்கலை உண்டுபண்ணிவிட்டன. இதனுல் சேனையுடன் ஒத்துழைத்து வந்த சண்டை விமானங்களை ஏராளமாக ஜெர்மானியர்கள் இங்கு கொண்டுவரும்படி நேரிட்டது. 1943-ம் வருஷ முடிவில் ஜெர்மனியின் சண்டை விமானப் படையின் பாதி பாகம் தற்காப்புப் போரிலீடுபடுத்தப்பட்டது.

இதுவும் போதவில்லை. அமெரிக்க விமானத் தாக்குதல்கள் அதிகரித்து வந்ததால் இரவு சண்டை விமானங்களை அடிக்கடி பகலிலும் உபயோகப்படுத்த வேண்டியதாயிற்று. கடைசியில் சண்டை விமானங்களின் தேவை அதிகப்பட்டதால் வெடி விமானங்களைக் கட்டுவதைக் கைவிட வேண்டியதாயிற்று. சேனைக்குக் கிடைத்துவந்த விமான உதவி இப்பொழுது போய்விட்டது.

இந்த நிலைமையுடன் நாம் நார்மண்டியில் இறங்கினேம். ஜெர்மன் விமானப் படை ஜெர்மனியைத் தற்காப்பு செய்வதில் ஈடுபட்டிருந்ததினுல் படைகளிறங்குவதைத் தடுக்க அதனிடம் உபரியான சண்டை விமானங்கள் கிடையாது. நமது புதிய நடவடிக்கைக்கு விமானங்கள் தேவைப்படக்கூடுமாதலால் பகல், இரவு விமான நடவடிக்கை சற்று குறையுமென்று ஜெர்மனி நம்பி இருந்திருந்ததால் அது ஏமாற்றமடைந்துவிட்டது. ஜெர்மனியிலுள்ள லக்ஷியங்கள் பிரிடிஷ், அமெரிக்க விமானங்களால் முன்னைவிட பலமாகத் தாக்கப்பட்டது.

படைகளிறங்கியபின் பாம்பர் கமாண்டைச் சேர்ந்த விமானங்கள் மட்டும் ஜெர்மனி பேரில் 150,000 டன்கள் மொத்த எடைமானமுள்ள வெடிகுண்டுகளைப் போட்டிருக்கின்றன. யுத்தத்தின் முதல் $3\frac{1}{2}$ வருஷங்களில் ஐரோப்பாவிலுள்ள எல்லா லக்ஷியங்கள் பேரிலும் போடப்பட்ட வெடிகுண்டுகளின் மொத்த எடையைவிட இந்தக் கணக்கு $1\frac{1}{2}$ மடங்கு அதிகமானது. எட்டாவது அமெரிக்கப் படை வீசிய குண்டுகளையும் கணக்கிட்டால் படையெடுப்புக்குப்பின் ஜெர்மனிபேரில் குறைந்த பக்ஷம் 2,50,000 டன்கள் மொத்த எடையுள்ள குண்டுகள் வீசப்பட்டனவென்று நாம் சொல்லக்கூடும்.

சென்ற வருஷத்தில் ஆரம்பித்த குண்டு வீச்சு முறை துரிதப்படுத்தப்பட்டு சாவாதனமாக அதிகரித்ததற்கும் வெடி விமானங்களின் சங்கியை மிகுதியாக அதிகரித்ததுடன் விமானங்களின் வெடி குண்டுகளைத் தாங்கிச் செல்லும் சக்தியும் விமானத்தாக்குதல் முறையில் முன்னேற்றமும்தான் காரணங்களாகும்.

ஜெர்மானியர்கள் பிரிடனைத் தாக்க முற்பட்டபொழுது இரவு பூராவும் விமானங்கள் தகுதி தகுதியாகத் தாக்கி நமது தற்காப்புப் படைகளை அயர்ந்துவிடும்படி செய்வதென்று திட்டம் போட்டிருந்தார்கள். பாம்பர் கமாண்டும் இந்த முறையை முதலில் கையாண்டது. பிற்பாடு லக்ஷியத்தை சிறிது காலம் ஏராளமான விமானங்களைக்கொண்டு தாக்கினால் அதிக நாசமேற்படுமென்று முடிவுக்கு வந்தது. ஆக் ஆக் பீரங்கிப் படையாளர்களும், இரவு சண்டை விமானிகளும் குறிப்பிட்ட சிறிது நேரத்திற்குள் அதிக வெற்றிகளைப் பெற முடியாதென்றும், ஒரே சமயத்தில் அநேக இடங்களில் தீப்பற்றிக்கொண்டால் நெருப்பணைக்கும் படையினரும் திணறிப் போய்விடுவார்களென்றும் நாம் மதித்துவிட்டோம். குறிப்பிட்ட இடத்திற்கு ஒவ்வொரு விமானமும் நிச்சயமாக எந்த மணிக்கு வரவேண்டும் என்று விஞ்ஞான சாஸ்திர முறையில் ஏற்பாடு செய்ய முடிந்ததால் குறிப்பிட்ட சிறிது கால அளவில் வெடி விமானங்கள் ஏராளமாகச் சென்று ஒரு லக்ஷியத்தைப் பலமாகத் தாக்க முடிந்தது. ஆயிரம் வெடிவிமானங்கள் சென்று தாக்கின. 1942-ம் வருஷத்தில் நமது விமானப் படை இருந்த நிலைமையில் இது ஒரு பெரிய சிரமம்தான் இருந்தது. அதன் விளைவுகள் அபாரமாக இருந்தன. கோலோன் 1½ மணி நேரம் தாக்கப்பட்டபொழுது விமானங்கள் நிமிஷத்துக்கு 12 வீதம் வந்து சேர்ந்தன. தற்காப்புகள் பேரில் ஏராளமான வெடி குண்டுகள் வீசப்பட்டன. நமக்கு 4 சத விகிதம் விமான நஷ்டமேற்பட்டது.

அந்த சமயத்தில் மூன்று தடவைதான் 1,000 வெடி விமானங்கள் சென்று தாக்குதல் செய்யக்கூடியதாக இருந்தபோதிலும் அந்த தந்திரத்தையே மற்ற தாக்குதல்களுக்கும் ஆதாரமாகக் கொண்டார்கள். 1944-ம் வருஷத்தில் யுத்த தந்திரத்தினாலும் முஸ்தீப்புகளின் அபிவிருத்தியினாலும் 1942-ம் வருஷத்தில் கோலோனை 1,000 விமானங்கள் தாக்கி இழைத்த தீங்கை 289 விமானங்கள் ஒன்றுபட்டுத் தாக்கி இழைக்க முடிந்தது.

அதற்குப்பின் நாங்கள் ஒரு விசேஷமான வெடி குண்டை உற்பத்தி செய்தோம். ஒரே லக்ஷியத்தின் பேரில் அதைக் குறிப்பாகப் போட்டவுடன் அது பிரகாசமாக எறிந்து வெளிச்சத்தைத் தரும். இந்த வெளிச்சம் மேகத்தின் வழியாகவும்கூட திருஷ்டி கோசரமாகும். இந்த உபாயத்தின் மூலம்தான் வழிகாட்டும் விமானப் படை தயாரிக்கப்பட்டது. புதிய முஸ்தீப்புகளும் வழங்கப்பட்ட அந்தப் படைதான் நமது பலமான தாக்குதல்கள் வெற்றிகரமாக முடிவடைந்ததற்கு முக்கிய காரணமாக இருந்தன. வழிகாட்டும் வெடிகுண்டுதான் லக்ஷியத்திலுள்ள குறிப்பான பாகம். அதைப் பார்த்துத்தான் பாம்பர் கமாண்டு விமானங்கள் தாக்குதலைத் துவக்கும்.

நமது விமானப்படை என்ன சாதித்திருக்கிறதென்று கவனிப்போம். அநேகம் நமக்கு அறிமுகமாகிவிட்டன. ஆகிலும் சில முடிவுகள் ஊர்ஜிதமாக வேண்டும். விமானப் படையிலுள்ள ஒளிப்படங்களை அன்வயப்படுத்தக்கூடிய விமர்சகர்கள் அழிவைப்பற்றி அவர்கள் செய்தமுடிவுகள் சரியாதவரானதாவென்று முடிவுசெய்து கொள்ளலாம். அவர்கள் அழிவைக் குறைத்துச் சொல்லியிருக்கிறார்களென்றுதான் சொல்லவேண்டியிருக்கிறது. எயிலா சாபவில் செங்குத்தாக இருந்து ஒளிப்படமெடுத்திருந்தால் அநேக கட்டடங்கள் பழுதுபட்டதாகவே புலப்பட்டிருக்காது. ஏனெனில் கட்டடங்களின் மேல் கூரை பழுது படாமல் நிலைத்திருந்தது. ஆகிலும் தரை மட்டத்திலிருந்து அவைகளை கவனித்தால் கட்டடங்களின் உள் பக்கம் பூராவும் நாசமடைந்துவிட்டனவென்று சுலபமாகக் கண்டுபிடித்துவிடலாம்.

போ நதிப்பள்ளத்தாக்கு ஐரோப்பாவின் அமர்க்களம்.

மர்ரே ஒளல்டன்.

(சாடர்டே ஸீட் என்னும் பத்திரிகை.)

ஐரோப்பாவின் சரித்திரம் அமைக்கப்படும் ஒரு சிறந்த கட்டமாகிய இப்பொழுது விடுவிக்கப்படும் போநதிப் பள்ளத்தாக்கில் உருவான சில குணுதிசயங்கள் காணப்படுகின்றன.

இந்தக் கட்டுக்கரையில் மர்ரே ஒளல்டன் அந்தப் பள்ளத்தாக்கின் இயற்கை அமைப்புகளையும், அவைகள் பொது மக்களின் குணுதிசயங்களை எவ்விதம் பாதித்திருக்கின்றன என்றும் விவரிக்கிறார்.

இதாலியின் பூகோளம், பொருளாதாரம், ராணுவ சரித்திரம் முதலியவற்றை போநதி பாதித்திருக்கிறதென்பதில் ஒருவரும் குறைத்துச் சொல்லமுடியாது. மேலும் ஐரோப்பிய நாகரீகத்துக்கும் அதுதான் மிகவும் முக்கியமானது.

போநதிப் பள்ளத்தாக்கு ஐரோப்பாவின் அமர்க்களம் என்று சொல்லுவதுண்டு. இது உண்மைதான். இங்குதான் கெல்டுகளும், போனிஷ்யர்களும், லதீன்களும், டேன்களும் போரை நடத்தியிருக்கிறார்கள்.

போநதிப் பள்ளத்தாக்கில்தான் ஹானிபால் படைகளைத் திரட்டியபின் இதாலிக்குள் படையெடுத்தான் இங்குதான் ஸீசர் புறக்கணிக்கமுடியாத முடிவுசெய்து ரூபிகன் நதியைத் தாண்டினார். சாம்ராஜ்யத்தை ஸ்தாபித்தார். இங்குதான் நாகரீகமற்றவர்கள் அழிவுபட்டு வந்த சாம்ராஜ்யத்தை நிர்மூலமாக்கினார்கள். சார்லிமென் அதை மறுபடியும் ஸ்தாபித்தார். சென்ற நூற்றாண்டில் ஸீஸரின் நடவடிக்கைக்குப்பின் இதாலிய சரித்திரத்திலேயே முக்கியமான சம்பவம் நேரிட்டது. அதாவது வடக்குப் பக்கத்தில் தேச ஒற்றுமை ஏற்பட்டது.

ஐரோப்பாவில் போநதிப் பள்ளத்தாக்கு ஒப்பற்றது. மத்திய யுத்தத்தில் ஐரோப்பாவின் நாகரீகம் படைத்த இரண்டு பிரதேசங்களில் அது ஒன்றாகயிருந்தது. அதன் ஜனத்தொகை அதிகம். அதற்கும் ஹாலந்துக்கும் ரைன்நதிமூலம் தொடர்பு ஏற்பட்டிருந்தது.

போநதிப் பள்ளத்தாக்கில் மலைகளும் நதிகளும் ஏராளமாக இருப்பதினால் ஐரோப்பாவிலுள்ள வடக்கு தேசங்களிலிருந்து ஆல்ப்ஸ் மலையினாலும் தெற்கு இதாலியிலிருந்து அபினைன்ஸ் மலைகளினாலும் அந்த பிரதேசம் துணிக்கப்பட்டிருக்கிறது.

முன்காலத்தில் அது இதாலியின் ஒரு பாகமென்றே கருதப்படவில்லை. காலின் ஒரு பாகமென்று கருதப்பட்டது. இன்றைக்கும் போசமவெளியின் மேற்கு பாகத்தில் பீட்மாண்டில் பிரெஞ்சு பாஷையைப் பேசிவருகிறார்கள். பிரென்னர் கணவாயைச்சுற்றி டேனியரின் அம்சங்கள் ஜனங்களிடையே காணப்படுகின்றன. இவைகளிலிருந்து இந்த சமவெளியில் அநேக ஜாதியார்கள் சந்தித்தார்களென்று ருஜுவாகுகிறது.

போநதிப்பள்ளத்தாக்கின் மத்திய மாகாணமான லம்பார்டி சமவெளி இதாலியில் முக்கியமான தொழிற்சாலை பிரதேசம் என்று சொல்லப்படுகிறது. பீட்மாண்டிலுள்ள டூரின் தொழிற்சாலை நிலயங்கள் மிலானுக்கு அடுத்த ஸ்தானம் வகிக்கக்கூடியது.

தெற்கிலுள்ள ஜனங்கள் சோம்பேரிகளாகயிருக்கும்பொழுது வடக்கு இதாலியிலுள்ள ஜனங்கள் வலிமையும், புத்திசாலித்தனமும், சுறுசுறுப்பும் உள்ளவர்களாக இருக்கிறார்கள். ஆகையால் வடக்கில்தான் இதாலிய ஜனநாயகம் வேரூன்றியிருக்கிறதென்பதில் ஒரு ஆச்சரியமுமில்லை. பாஸிதத்வம் அதைத் தாத்காலிகமாக அடக்கியாண்டபோதிலும் அது ஒருபொழுதும் அழிக்கப்படவில்லை.

அங்குள்ள தொழிலாளர்களும் விவசாயிகளும் ஐரோப்பாவிலேயே மிகவும் பிரயாசை எடுத்துக்கொள்ளக்கூடியவர்கள். டூரினிலும், மிலானிலும் உள்ள மகத்தான தொழிற்சாலைகளும் நாட்டுப்புறத்திலுள்ள அபாரமான நில சாகுபடியும் இவற்றை விளக்கிக்காட்டுகின்றன. கைத்தொழில்களிலும் வடக்கிலுள்ள தொழிலாளர்களைவிட உயர்வானவர்கள் ஐரோப்பாவிலேயே ஒருவரும் கிடையாது. அவர்கள் சிறந்த எஞ்ஜினியர்கள், ரஸ்தா அமைப்பவர்கள், பாலம் கட்டுகிறவர்கள், கப்பல்கட்டுகிறவர்கள்.

இதாலியைப்போல போநதிப் பள்ளத்தாக்கிலும் சதாகாலமும் சூரிய வெளிச்சம் கிடையாது. மாரிகாலத்தில் பிரிடனைவிட கடுமையான குளிர் காணப்படுகிறது. இந்த சீதோஷ்ணஸ்திதிதான் ஜனங்களின் துணிவுகரமான நடவடிக்கையாக பிரதிபலித்திருக்கிறது.

இந்தப்பள்ளத்தாக்கின் சீதோஷ்ணஸ்திதி ஐரோப்பாவின் சீதோஷ்ணத்தை ஒத்துயிருக்கிறது. இதாலிய தீபகற்பத்தின் சீதோஷ்ணஸ்திதியைவிட வேனீர் காலத்தில் அதிக உஷ்ணமாகவும் மாரிகாலத்தில் அதிக குளிருள்ளதாகவுமிருக்கிறது. மிலானில் சில சமயங்களில் தெர்மாமீடரின் ரஸம் பூஜயத்துக்குக்கீழும் இறங்கிவிடும்.

அநேக நூற்றாண்டுகளாக போநதிப் பள்ளத்தாக்கின் பெரும்பாகம் சாகுபடி செய்யப்பட்டுவந்தது. அநேக விமான கால்நடைகள் அங்கு இருக்கின்றன. பூமியின் செழிப்பு அதிகமாயிருப்பதால்போ பிரதேசத்திலிலுள்ள தண்ணீர் நிரம்பிய சமவெளிகளில் வருஷத்தில் 8 அல்லது 9 மாதங்கள் பூராவும் புல் அறுக்கக்கூடும்.

அங்கு விளையும் நெல் உலகத்திலேயே மிகவும் உயர்வானது. சமவெளியில் பட்டு தொழிற்சாலை மிகுதியாக இருக்கிறது. மலையடிவாரங்களில் வளர்ச்சிபெரும் ஆடுகள் ஏராளமான ரோமங்களைத் தருகின்றன.

மலைகள் சமீபத்திலிருப்பதால் நீர்சக்தி அதிகமாகக் கிடைக்கிறது. சமீபகாலத்தில் அதை பயன்படுத்தி இருப்புப்பாதைகளுக்கு மின்சார விளக்குகளும், தொழிற்சாலைகளுக்கு மின்சார சக்தியும், நகரங்களுக்கு விளக்குகளும் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு கிராமத்துக்கும் தொழிற்சாலைக்கும் மின்சார சக்தி ஸப்ளை செய்யப்படுகிறது.

இதாலியிலுள்ள கனமான தொழிற்சாலைகள் மிலானிலும் டூரினிலும் அமைக்கப்பட்டிருக்கின்றன. சமீப வருஷங்களில் மோட்டார்களும் விமானங்களும் ஏராளமாக உற்பத்தி செய்யப்பட்டிருக்கின்றன.

உத்தமமான ராஜ்ஜியத் தலைவர், யுத்த நிபுணர்.

சர்ச்சிலுக்கு அமெரியின் பாராட்டு.

இந்தியாவின் காரியதரிசியான Rt. Hon'ble L. S. அமெரி ஹாரோ பள்ளிக்கூடம் முதல் அவரது நண்பராகயிருந்து வரும் மிஸ்ட்டர் சர்ச்சிலைப் பற்றிக் கீழ் கண்ட புகழுரையை வெளியிடுகிறார்.

வாலிபம் முதல் அவர் துணிவுள்ளவராதலால் கூபா, இந்திய எல்லைச் சரகம், சூடான், தெற்கு ஆபிரிக்காப் போர்களுச்சென்று அவருடைய உயர்வான லக்ஷியங்களை அவர் போதித்து வந்தார். வருங்காலத்தில் மிஸ்ட்டர் சர்ச்சில் வசித்து வந்த யுகத்தில் அவர் ஒரு முக்கியத்வமுள்ளவரென்று எல்லோரும் ஞாபகப்படுத்திக்கொள்ளவேண்டுமென்பது தான் அவருடைய விருப்பம். முக்கியமாக, ஒவ்வொரு நூற்றுண்டிலும் இங்கிலாந்து தலைமை வகித்தது போல உலகத்திலேயே அந்த காலம், மிகவும் நெருக்கடியாக இருக்கவேண்டுமென்றும் அவர் விரும்பினார். இந்த விருப்பத்துக்கு அவருக்கு அநேக இடையூறுகளும் ஏமாற்றங்களும் ஏற்பட்ட போதிலும், இங்கிலாந்துக்கு ஆபத்தான நிலைமை ஏற்பட்ட பொழுது அவர் முக்கியமான ஸ்தானம் வகிக்கும் பதவிக்கு வந்துவிட்டார்.

"வீரர்களும் வீரர்களைப் போற்றுவது" என்ற தலையங்கத்துடன் கார்லைல் எழுதியிருக்கும் புத்தகத்தில் ஒரு உத்தம புருஷரை மின்னலுக்கு சமானமாகச் சொல்லியிருக்கிறார். மற்றவர்களெல்லாம் நெருப்புக்கு விறகு போன்றவர்கள். இந்த உபமானம் மிஸ்ட்டர் சர்ச்சிலுக்குப் பொருந்தாது என்று நினைத்தவரும் 1940-ம் வருஷ வேனீர் காலத்தில் நிர்வாகத்தில் அவருடன் கூட்டாளியாகவோ அல்லது பிரதிநிகள் சபையின் அங்கத்தினராகவோ இருந்திருக்க முடியாது. டன்கர்க்குக்குப் பின் ஏற்பட்ட நெருக்கடியான சில நாட்களில் மந்திரிகள் கூடிப் பேசியதை ஒருவரும் மறந்துவிட முடியாது. சாதாம்மைப் பற்றிசொன்ன அபிப்பிராயம் எனக்கு ஞாபகம் வந்தது. "அவருடைய அறையிலிருந்து வெளி வருகிறவர் எவரும் முன்னைவிட அதிக பலம் பொருந்தியதாக உணராமல் இருக்க முடியாது" என்று சொல்லுவதுண்டு.

கார்லைல் சொன்ன உபமானம் பூர்த்தியாக இருக்கவில்லை. ஏனெனில் மனித வாழ்க்கையில் விறகு தான் அக்னியைக் காப்பாற்றி வருகிறது. உத்தம குணங்களுள்ள ஒரு தலைவரை ஒரு தேச மக்கள் தான் உன்னதமான பதவியைப் பெறும்படி செய்து விடுகிறார்கள். மிஸ்ட்டர் சர்ச்சில் விஷயத்திலும் அவ்விதம் தான் நடைபெற்றது. அவர் இங்கிலாந்துக்கு உத்சாகம் ஊட்டினாரென்றால் பிரிடிஷ் மக்களும் அவரை ஆதரித்து வந்தார்கள். அவர் இடைவிடாது உத்தம பதவியையடைய உழைத்து வந்தார். இப்பொழுது அவருக்குப் பெருமையடையும் காலமும் தேசமும், கிடைத்துவிட்டது. அவர் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி உத்தம பதவியை அடைந்துவிட்டார்.

மிஸ்ட்டர் சர்ச்சில் யுத்தத்தை நடத்தும் முறையை இறுதியாக மதித்துப் பார்ப்பதற்கு சம்பவங்கள் இன்னும் மிகுதியாக இருக்கின்றன. ஆனால் ஒன்று மட்டும் சொல்லலாம். சாதாமுக்குப் பிறகு மிகவும் நெருக்கடியான சமயத்தில் தன்னுடைய சொந்த அனுபவத்தைக் கொண்டும், ஆராய்ச்சியினாலும் யுத்த தந்திரங்களை அறிந்தவர்களில் இவர் தான் தலைமை வகிக்கக்கூடும். தேசிய உணர்ச்சியை வெளியிடுவதிலும், பிரதிநிதி சபையில் ஒன்றுபட்ட ஆதரவைப் பெறுவதிலும் சக்தி பெற்றிருப்பதில் வாலிபமுள்ள பிட்டையும், லாயிட் ஜார்ஜையும், மிஸ்ட்டர் சர்ச்சிலுக்கு சமானமானவர்களென்று சொல்லலாம். ஆகிலும் ராணுவ பிரச்னைகளையும் ராணுவ அதிகாரிகளுடன் கலந்து கொள்ளுவதிலும் அவ்விருவர்களுக்கும்

அதிக அனுபவம் கிடையாது. மிஸ்டர் சர்ச்சில் சம்பந்தப்பட்ட மட்டில் கடுமையான அற்புதமான யுத்தமும் சரித்திரத்திற்கும் யுத்தத்துக்குமுள்ள சம்பந்தமும், அவருடைய முக்கியமான கண்ணோக்காக இருந்தன. இந்த மகத்தான யுத்தத்தில் அவர் புதிய வாழ்க்கை முறையை அனுபவித்து வருகிறார். அதன் பிரச்னைகளைத் தீர்ப்பதில் அவரிடமுள்ள எல்லாத் திறமையையும் அவர் உபயோகித்து வருகிறார். போரிலீடுபட்டிருக்கும் படைகள் ராணுவ வட்டாரத்தில் மிஸ்டர் சர்ச்சில் ஒரு நிபுணர் என்று அபிப்பிராயம் கொண்டிருக்கிறார்கள். இப்பொழுது தான் ஜனநாயகத்தில் உயர்வான ராஜ்ஜீய நிபுணரும் யுத்த அனுபவமும் பெற்ற ஒருவர் காணப்படுகிறார்.

பிரிடிஷ் சேவைப் படைகளுடையவும், பிரிடிஷ் ஜனநாயகத்தினுடையவும் பிரதிநிதி என்ற முறையில் தான் அவருடைய செல்வாக்கையும், யுத்த புண்யத்தையும் அவர் மற்ற வல்லரசுகளிடம் திறமையுடன் வற்புறுத்த முடிந்தது. ஜனாதிபதி ரூஸ்வெல்டும், மார்ஷல் ஸ்டாலினும் சிறந்தவர்கள் தான். ஒவ்வொருவரும் அந்த தேசத்தின் உறுதியையும் அபார சக்தியையும் பிரதிபிம்பிக்கிறார்கள். ஆகிலும் அவ்விருவரும் தங்களுடைய நடைமுறையில் இந்த யுத்தம் எக்காரணங்களுக்காக நடத்தப்படுகிறதென்றும், அதற்கு நாட்டு மக்கள் பாடுபடுகிறார்களென்றும், நடத்தும் யுத்த தந்திரத்துக்கு யார் ஜவாப்தாரி என்றும் சர்ச்சிலைப் போல் வெளிப்படுத்தவில்லை. போர் புரியும் நேசதேசத்தார்களுக்கும், கொடுமையின் கீழ் கஷ்டப்பட்டுக் கொண்டு நம்பிக்கையுடனிருந்து வந்த நண்பர்களுக்கும், வெற்றி பெற்றது போல் தோன்றிய பொழுதும், சஞ்சலப்பட்டுக்கொண்டிருந்த எதிரிகளுக்கும், அவர் பிராசீனமான இங்கிலாந்தை உருவெடுத்தது போல் நின்றார். பிட் சொன்ன பிரகாரம் இங்கிலாந்து தன்னுடைய சொந்த முயற்சியினால் தன்னைக் காப்பாற்றிக் கொண்டதுடன், உலகத்தையும் காப்பாற்ற உலகத்தாருக்கு ஒரு உதாரணம் காட்டியது.”

இவ்விதமாக திடமும், உறுதியும், ஆர்வமும், நயவஞ்சகமும், ஹாஸ்யமும், உலகமளாவிய பரந்தநோக்கமும், சிலாக்கியமான சில குறைவுபாடுகளும் உள்ள ஒரு உத்தமரான ஆங்கிலேயர் நீடூழி வாழ்ந்து நிற்கிறார்.

விடுதலை பெற்ற நாடுகளில் விரோதங்களைத் தீர்த்துவிடுவது.

பொறுப்புள்ள நிர்வாகங்களின் அலுவல்.

(டைம்ஸ் பத்திரிகை).

வார முடிவில் பிரஸ்ஸல்ஸில் நடைபெற்ற சம்பவங்களும், கிரீஸில் சமீபத்தில் நடைபெறும் கலகங்களும், இதாலியில் போனேமி நிர்வாக சபையில் ஏற்பட்ட குழப்பமும், எல்லாம் சேர்ந்து ஐரோப்பாவில் விடுதலை பெற்ற நாடுகளிலும் அல்லது அதன் வழியாகவும் போரை நடத்திவரும் நேசதேசப் படைகளின் நிர்வாகங்களுக்கு அநேக முறைகளில் ராஜீயச் சிக்கல்கள் ஏற்பட்டிருக்கிறன்றனவென்பதை வெளிப்படுத்துகின்றன.

விடுதலை ஏற்பட்டவுடன் அந்நாடுகளின் நிர்வாகம் அந்நாட்டின் மக்களிடம் ஒப்படைக்கப்பட்டு வருகிறது. இந்த நிர்வாகங்கள் தாத்காலிகமாக அமைக்கப்பட்டவையென்றாலும், அவைகள் நிலைத்திருக்கும் வரையில் அவைகள் சக்திபெற்றிருக்கவேண்டும். இரண்டு முக்கிய நிபந்தனைகள் இருக்கவேண்டும், ஒன்று அவைகள் நேதேசத்தாருக்கு ஆதரவளித்து உதவியனுப்பவேண்டும் இரண்டாவது நிர்வாகத்தில் நாட்டிலுள்ள சகலவிதமான அபிப்பிராயங்களின் பிரதிநிதிகளும் கலந்து கொள்ளவேண்டும்.

இரண்டாவது நிபந்தனையை நிறைவேற்றுவதுதான் சில சமயங்களில் கஷ்ட சாத்தியமாக ஆகிவிடுகிறது. சென்ற நான்கு வருஷங்களில் அநேகக் கெடுதல்கள் சம்பவித்திருக்கின்றன. ஆகையால் முன்னிருந்த ராஜீயக் கக்ஷிகள் ஜனபிரதிநிதிகள் உள்ள நிர்வாகத்தை அமைக்க அடிப்படையாக இருப்பார்களென்று எண்ணுவது சாவதானமில்லை. விடுதலை பெறுவதற்காக ஏற்பட்ட குழப்பமான நிலமையிலும், அதன் பிற்கால நடவடிக்கையிலும், யுத்த அவசியம் இன்னும் அதிகமாக இருக்கும்பொழுதும் பொதுஜன அபிப்பிராயத்தைக் கோறுவது சாத்தியமற்றது. மேலும் பொதுஜன அபிப்பிராயமும் தற்போதிய நிலமையில் தெளிவாகவும், நெடும்போக்கான திட்டங்களையும் நிறுவக்கூடுமென்று எதிர்பார்க்க முடியாது. அயல் நாடுகளில் வாசம் செய்து ஸ்வதந்திர நிர்வாகம் என்ற முறையில் ஆக்கிரமிக்கப்பட்ட அல்லது அடிமைப்பட்ட தங்களுடைய நாடுகளின் யுத்த முயற்சியை நடத்திவந்த நிர்வாகங்களை தொடர்ச்சியாகவும் சட்ட பூர்வமாகவும் விடுதலை பெற்ற நாடுகளில் அமைத்துவிடலாம். ஆகிலும் தேசத்தின் எல்லைக்கு அப்பாலிருந்துகொண்டு தேசசேவை செய்து வந்தவர்களுக்கும், உள்நாட்டிலேயே தங்கியிருந்து நாஸிகளின் ஆக்கிரமிப்பு கஷ்டங்களையும்

கொடுமைகளையும் அனுபவித்து, வெற்றிகரமாக ஜெர்மானியர்களை எதிர்த்துப் போராடியவர்களுக்கும் ஏற்படும் விரோதங்கள் சச்சரவுகளுக்குத் தகுந்த முகாந்திரமாக இருக்கக்கூடுமென்பது தெளிவாகிறது. ஆகையால் முன்சொன்னவர்களின் பாத்தியத்தை ஒத்துக்கொண்டு பின் சொன்னவர்களை புறக்கணிப்பது வக்கரமான நீதி முறையாகும். இவ்விதமாக பொதுஜன ஆதரவு பெற்ற ஒரு தேசிய நிர்வாகத்தை அமைப்பதில்தான் சிரமம் ஏற்படுகிறது. பொது ஜனங்களிடையே உள்நாட்டின் புனருத்தாரணத்துக் குறிய சீர் திருத்த முறையிலும் அல்லது எதிரிகளுடன் நேர்முகமாகவோ அல்லது கபடமாகவோ ஒத்துழைத்தவர்களை சிக்ஷிக்கும் முறைகளிலும் அபிப்பிராயபேதம் உண்டாகி சச்சரவுகள் ஏற்படுகின்றன.

ஒன்றுபட்ட ராணுவ நடவடிக்கைகள் நடந்துவரும் வரையில் இந்த பிரச்னைகளை நேசதேசத்தார்கள் எல்லோரும் கவனித்து வரவேண்டும். ஜனநாயக முறைப்படி பாரபக்ஷமில்லாத தேருதல்கள் நடைபெறும் வரையில் இந்த பிரச்னைகளைத் தீர்த்துவிட முடியாது. அவ்வித தேருதல்கள் ஐரோப்பாவில் போர் முடிவடையும் வரையில் நடைபெற முடியாது. இந்த அவகாசத்தில் நேசதேச ராணுவ அதிகாரிகள் மிகவும் சாமர்த்தியத்துடன் நடந்துகொள்ளவேண்டும். ஆனால் விரோத மனப்பான்மையுள்ள கக்ஷிகள் எவ்விதமான ஒழுங்குள்ள ஜனநாயக நிர்வாகமும் அமுல் நடத்த முடியாதவண்ணம் தங்களுடைய விரோதங்களை முற்றிவரும்படி செய்யக்கூடாது. நிர்வாகத்தில் பிரதிநிதித்வம் வேண்டியதில்லையென்றும், ஆனால் தேசத்தின் சேனையைத் தவிர தனிப்பட்ட ஒரு கவசம் பூண்ட படையை பரிபாலித்து வரவேண்டுமென்று உரிமை கொண்டாடுவது, நியாயமற்ற அல்லது அனுமதிக்க முடியாத அளவிற்கு எதிர்த்துப் போராடுவதற்கு ஒரு உதாரணமாகும். இயற்கையாகவே கஷ்டமாக உள்ள நிலைமையின் கெடுதல் செய்யும் சக்தி, ஒன்று அல்லது இரண்டு பொருப்பற்ற இடங்களில் நடைபெற்றது போல், சர்வதேசங்களுக்குறிய பிரச்னைகளை எடுத்துக்கொண்டு உள்நாட்டு விரோதங்களை அதிகரிக்க முயற்சி செய்தால், பலமடைந்துவரும் விரோத மனப்பான்மையுள்ள கோஷ்டிகளில் ஒரு சாரார் பிரிடனையும் அமெரிக்காவையும் ஆதரிக்கிறார்களென்றும், மற்றொரு சாரார் ருஷ்யாவை ஆதரிக்கிறார்களென்றும், அல்லது அவர்களை அந்த வல்லரசுகள் விசேஷமாக ஆதரிக்கிறார்களென்றும் சொல்லுவது பெரிய வல்லரசுகளுக்கிடையே பிளவை உண்டுபண்ணவும், அவர்களுக்குள் சண்டையை மூட்டி விடவும் செய்யப்பட்டுவரும் விஷம நடவடிக்கையாகும். இந்த நடவடிக்கையைத்தான் நாஸி பிரசாரர்கள் அநேக காலமாக ஆதரித்து வந்திருக்கிறார்கள். மேற்கு ஐரோப்பாவிலும் கிழக்கு ஐரோப்பாவிலும் மூன்று பெரிய வல்லரசுக்குள் கொள்கையிலும் நடவடிக்கையிலும் உள்ள ஒற்றுமைக் கொள்கையைத்தான் அம்மூன்று நாடுகளும் முக்கியமாக கடைப்பிடித்து வருகின்றன. அவர்களுக்குள் அபிப்பிராய பேதங்கள் ஏற்பட்டால் அவர்கள் கூடி நேர்முகமாக அவைகளைத் தீர்த்துக்கொள்ளுவார்களே ஒழிய, உள்நாட்டுச் சச்சரவுகளில் அவர்கள் பங்கெடுத்துக்கொண்டு அவைகளுக்குப் பரிகாரம் தேடமாட்டார்கள். விடுதலை பெறும் நாடுகள் சம்பந்தமாக நேசதேசத்தார்களின் நடவடிக்கை சம்பந்தப்பட்டமட்டில் நேசதேசப் படைகளுக்கு|பூர்ணமான வெற்றி கிடைக்கும் வரையில் ராணுவ லக்ஷியங்கள்தான் முக்கியத்துவமுள்ளதாக இருக்கும்: அந்த அவசியத்தை முன்னிட்டு உள்நாட்டில் அமைதியையும் ஒழுங்கு முறையையும் நிலைநாட்டுவது மெத்த அவசியமாகும். அத்துடன், ஆங்காங்குள்ள தேசிய நிர்வாகங்கள் பொதுஜன ஆதாரமுள்ள விரிவான நோக்கங்களுடன் இருக்கவேண்டும். மேலும் தேசத்தின் கதியை அநேக காலம் வரையில் நிர்ணயிக்க அவர்களுக்கு அபாரமான அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறதென்று அவர்கள் நினைக்கக்கூடாது. அவர்களுக்குப் பதிலாக நிரந்தரமான நிர்வாகம் ஏற்படும் வரையில் அவர்கள் தாக்காலிகமான நிர்வாக டிரஸ்டிகள் என்றும் அவர்கள் எண்ணம் கொள்ளவேண்டும்.

போலந்தில் புதிய நிர்வாக சபை.

தாத்காலிகமான ஏற்பாடு.

(டைம்ஸ் பத்திரிகை).

லண்டனில் M ஆர்சிஸேவிஸ்கியின் தலைமையில், M. டிகோடோஜிலிக், வியவசாய கக்ஷியின் பிரதிநிதி முதலியவர்களில்லாமல் ஒரு புதிய போலிஷ் நிர்வாகம் அமைக்கப்பட்டிருப்பதைப்பற்றி, தற்போதுள்ள நிலைமைக்கும் எதிர் காலத்திய அவசியத்துக்கும் பொருத்தமில்லாத ஒரு நடவடிக்கை தாத்காலிகமான ஏற்பாடு என்பதைத் தவிர வேறு ஒன்றும் சொல்ல முடியாது.

யுத்தத்துக்குமுன் போலந்திலிருந்த பிலசுடிஸ்கி நிர்வாகம் விவசாயச் சீர்திருத்தம், ருஷ்யாவுடன் சம்பந்தம் என்ற இரண்டு மகத்தான பிரச்னைகளைத் தீர்க்கத் திறமையற்றதாக

இருந்ததென்று சொல்லப்பட்டது. போலந்தின் நிர்வாகம் என்று சொல்லக்கூடிய எந்த ஸ்தாபனமும் இந்த இரண்டு பிரச்னைகளையும் தீர்க்கவேண்டியது அவசியமாகும்.

M. ஆர்சி ஸேவிஸ்கி ஜெர்மன் ஆக்கிரமிப்பு காலத்தில் போலந்தில் கொரில்லாப் போரை நடத்திய போலிஷ் கீழறுப்பான் இயக்கத்தில் வேலை செய்த தைரியமுள்ள கைதேர்ந்தவர். தைரியமிருந்தால் மட்டும் ராஜிய சாமர்த்தியம் இருக்கும் என்று சொல்லுவதற்கில்லை. வியவசயிகள் கக்ஷியுடன் சமாதானம் செய்துகொள்ளக் கூடாததும், ருஷ்யாவுடன் வெற்றிகரமான சம்பாஷணை நடத்துவதற்கு அடிப்படையான கொள்கைகளைப் புறக்கணிக்கக் கூடிய எந்த போலிஷ் நிர்வாகமும் போலந்தின் அக்கரைக்கு எவ்வித சேவையும் செய்ததாக ஆகாது.

அநேக காலமாக போலிஷ் பிரச்னை பிரிடிஷ் நிர்வாகத்துக்கு அதிக சங்கடத்தை உண்டுபண்ணியிருக்கிறது. சிறியதாக இருந்தபோதிலும் தீரத்தினாலும் உறுதியாலும் கியாதிபெற்ற போலிஷ் படைகள் இதாலியிலும், மேற்குப் போர்முனையிலும், கடலிலும், ஆகாயத்திலும் பிரிடிஷ் படைகளுடன் நெருங்கி ஒத்துழைத்து வந்திருக்கின்றன. இந்த வீரர்கள், அவர்களின் ராஜிய பிரதிநிதிகள் மூலம், போலந்தின் வருங்கால க்ஷேமத்திற்கு திட்டம் போடுவதில் ஒரு பங்கெடுத்துக்கொள்ளவேண்டுமென்று எல்லோரும் பிரியப்படுகிறார்கள். ஆகிலும் நாஸிகளின் கொடுமையிலிருந்து போலந்தை விடுதலை செய்ததும் வருங்காலத்தில் போலந்தின் பத்திரத்துக்கு உதவிச்சுவராயிருக்கும் சக்தி வாய்ந்ததுமான ருஷ்யா என்ற பெரிய வல்லரசைக் கலந்து ஆலோசிக்கமால் போலந்தின் வருங்கால திட்டம் நிறுவப்படக் கூடுமாவென்பதும் தெளிவுபடவில்லை. துரதிருஷ்ட வசமாக லண்டனிலுள்ள போலிஷ் ராஜியவாதிகளின் பெரும்பான்மையோர் கெடுதலான, நம்பிக்கையற்ற ஐதீகத்தை மூடபக்தியுடன் அவலம்பித்து, அவர்களுக்குள் பிரமுகராக இருந்த தலைவரை ராஜினாமாச் செய்யும்படி கட்டாயப்படுத்திவிட்டார்கள். அந்தத் தலைவர் தான் உண்மைகளை நன்கு மதித்து அவைகளை அடிப்படையாகக் கொண்டு போலந்தின் வருங்கால க்ஷேமத்திற்குறிய நடைமுறையில் உபயோகமுள்ள திட்டத்தை நிறுவினார். இப்பொழுது ராஜியவாதிகள் செய்திருக்கும் தன்னலக் கெடுதல் போலந்தின் புனருத்தாரணத்தை வருங்காலத்தில் பாதிக்காது. அது இப்பொழுது செய்யக்கூடியதெல்லாம் அந்த திட்டங்களை ஆதரிக்கிறவர்களை நிர்வாகத்தில் கலந்துகொள்ளாமல் தடுப்பது தான்.

ஜப்பானைச் சுற்றி கடல்பிடிப்பு வலுவடைகிறது.

சிறிய கப்பல்கள் ஸப்ளை மார்க்கங்களைத் துணிக்கின்றன.

(A. J. மாக்வின்னி.)

ஜப்பானியர்களுக்கு எதிராக கடற்படைப் போரில் பிரிடனில் ஏற்படப்போகும் முக்கியமான மாறுதல் சம்பந்தமாகத்தான் பிரிடிஷ் தூரக்கிழக்கு கடற்படையின் தளகர்த்தரான கடற்தளபதி ஸர் ப்ரூஸ் பிரெசர் கடற்படை இலாகா சங்கத்தின் விவாதங்களில் கலந்து கொள்ள லண்டனுக்கு விமானத்தில் சென்றார்.

அவர் தூரக்கிழக்குக்குத் திரும்பிவந்தபிறகும் லண்டன் சம்பாஷணையைப்பற்றி உத்தியோக முறையில் ஒரு தகவலும் வெளியிடப்படவில்லை. அவர் லண்டனுக்குச் சென்றதைப்பற்றியும் யாதொரு தகவலும் உத்தியோக முறையில் வெளியிடப்படவில்லை. புதிதாக எந்த முறைகள் மேற்கொள்ளப்படுமென்பதைப்பற்றி ஆபீஸர்களும் கடற்படை மாலுமிகளும் ஊகித்து வருகிறார்கள்.

இந்த ரகசிய மத்தியில் காலக்கிரமத்தில் பிரிடிஷ் யுத்தக் கப்பல்கள் இந்துமகா சமுத்திரத்தைத் தவிர பஸிபிக் கடலிலும் போர்புரியுமென்று ஸ்பஷ்டமாக அறிக்கையை வெளியிட்ட மிஸ்ட்டர் சர்ச்சிலின் சமீபகால சொற்பொழிவு ஞாபகத்துக்கு வருகிறது.

ஐந்து வருடங்களாக அட்லாண்டிக்கிலும், மத்தியதரைக் கடலிலும், ஆர்டிக் கடலிலும் வடக்குக் கடலிலும், குறுகலான அபாயம் பொருந்திய இங்கிலிஷ் கால்வாயிலும் போரை நடத்திய மாலுமிகள் போர்முனையிலிருந்து தங்களுடைய கவனத்தைச் சிறிது திருப்பமுடியும். அவர்கள் தங்களுடைய வேலையைத் திறமையுடன் செய்து இந்துமகா சமுத்திரத்தில் ஆதிக்கம் பெற்றுவிட்டார்கள். பிரிடிஷ் கடற்படை மாலுமிகள் ஜப்பானை பலமாகத் தாக்கவேண்டுமென்று பிரியப்படுகிறார்கள்.

மேற்கிலுள்ளவர்கள் டங்கர்க்கை நினைத்திருப்பதுபோல அவர்கள் சிங்கப்பூரை ஞாபகம் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். பஸிபிக் பிராந்தியத்தில் அமெரிக்கர்கள் மட்டுமில்லாமல் பிரிடனும் அமெரிக்காவும் எப்பொழுதும் போரை நடத்துமென்று அவர்கள் அநேகமாக

சிந்தித்து வருகிறார்கள். சரித்திரத்திலேயே மகத்தான கடற்படையைத் திரட்டவேண்டுமென்று அவர்கள் விரும்புகிறார்கள். போரை நடத்தாமல் கடலாதிக்கம் பெற்றிருப்பது சங்கடமாகயிருக்கிறதென்று அவர்கள் பேசிவரும்பொழுது இரண்டு வருஷங்களுக்குமுன் ஜப்பானிய கடற்படை, பெருமையுடனும் ரீத்திக்கொண்டும் வங்காளவிரிகுடாவிற்குள் சென்றதென்பதைக்கேட்டு நாம் ஆச்சரியப்படுகிறோம்.

ரோந்து நடைபெறுகிறது.

இந்துமகா சமுத்திரத்தில் ஜப்பானிய நீர்மூழ்கிகள் எப்பொழுதாவது தலைகாட்டுவதைத் தவிர மற்றொரு சம்பவமும் நடைபெருததால் அங்குள்ள கடற்படை தளங்களின் முக்கியத்வம் போய்விட்டதென்று அநேகர்கள் சொல்லுகிறார்கள். இது மிகவும் கல்பிதமான அறிவற்ற அபிப்பிராயம்.

யுத்தக் கப்பல்களும், சஞ்சாரிகளும், விமானந்தாங்கிகளும், நாசகாரிகளும், பஸிபிக் கடலுக்குச் செல்லக்கூடுமென்பதிலிருந்து இந்துமகா சமுத்திரத்தில் பிரிடிஷ் கடற்படை ஆதிக்கம் பெற்றிருக்கவேண்டுமென்ற அவசியம் போய்விடவில்லை.

இந்த ஆதிக்கத்தைப் பரிபாலித்து வரவேண்டுமானால், இந்துமகா சமுத்திரத்தில் அங்குமிங்கும் சென்று முன்னணிப் போருக்கு உதவிப்படைகளைக் கொண்டுபோகும் எல்லா துருப்புகள், சாமான் ஏற்றிச்செல்லும் துணைக்காவல் கப்பல்களும் காப்பாற்றப்படவேண்டும். எல்லா சமுத்திரங்களிலும் ஜெர்மனியிடம் 50-க்கு மேற்பட்ட நீர்மூழ்கிகள் இருக்கக்கூடுமென்று எனக்குச் சந்தேகமாக இருக்கிறது. ஆகிலும் ஜப்பானிடம் உள்ள நீர் மூழ்கிகள் அழியும் வரையில் பிரிடனின் நாசகாரிகளும், போர்க் கப்பல்களும், படகுகளும், நீர் மூழ்கியை அழிக்கும் கப்பல்களும் இடைவிடாது கவனத்துடன் ரோந்து செய்யவேண்டும். கடற்கரையிலுள்ள விமானங்கள் செல்லக்கூடாத இடத்தில் விமானந்தாங்கிகள் இந்துமகா சமுத்திரத்தில் ரோந்து செய்யவேண்டும்.

மேலும் மேற்கிலிருந்து ஜப்பான் வசமுள்ள பிரதேசங்கள் தாக்கப்படவேண்டும். தூரக்கிழக்கில் எவ்வித சம்பவங்கள் நேரிட்டாலும் பிரிடனின் கடற்படை அதற்கு மேற்குப் பக்கத்திலுள்ள கடல் மார்க்கங்களை ரக்ஷித்துவரவேண்டும். சுமத்ராவிலிருந்து ரெங்கூனுக்கு ஆயுதங்களையும், வெடி மருந்தையும், உணவுப் பொருள்களையும் திருட்டுத்தனமாகக்கொண்டு போகும் கப்பல்களை வழிமறிக்கவும் இரவுபகலாக கப்பல்கள் ஜாக்கிரதையாக ரோந்து செய்யவேண்டும். அந்த சாமான்களை ஏற்றிச்செல்லும் படகுகளையும் நாம் அலக்ஷியம் செய்யக்கூடாது.

கிழக்கு சமுத்திரங்களில் அநேக வெற்றிகளைப் பெற்றுவரும் பிரிடிஷ் கடற்படையைச் சேர்ந்த நீர்மூழ்கிகள் ஜப்பான் கடற்கரை ஓரமாக நடத்தும் போக்குவரத்துகளைக் கண்காணிப்புச் செய்யவேண்டும். உலகம் கேள்விப்படாத இன்னும் அநேக அலுவல்களை அது செய்யவேண்டும்.

சிறிய கப்பல்களுக்கு மகத்தான வேலை.

அரக்கான் மலைகளிலுள்ள ஜப்பானிய உற்றுநோக்காளர்களைக் கண்டுபிடிக்கச்சென்ற பிரிடிஷ் முன்னணி ரோந்துப் படைகளுடன் அரக்கான் முனைக்கு நான் சென்றிருந்தபொழுது பர்மாவின் நதிகளிலும், ஏரிகளிலும் கனமான ஆயுதங்களுள்ள வேகம் பொருந்திய சிறிய பிரிடிஷ் மோட்டார் கப்பல்களும், இந்திய கடற்படையைச் சேர்ந்த மோட்டார் படகுகளும் காணப்பட்டன. ரெங்கூன் வீழ்ச்சி பெற்றபொழுது பிரிடிஷ் படைகளுடன் சேர்ந்து கொண்ட யர்மா கடற்படையைச் சேர்ந்த சுரங்கவெடிகளைப்பாவும் கப்பல்களும் அங்கு காணப்பட்டன.

பெரிய யுத்தக் கப்பல்கள் இருக்குமிடத்திலிருந்து நூற்றுக்கணக்கான மைல்கள் தாண்டியுள்ள இந்தச் சிறிய கப்பல்கள் சஞ்சாரம் செய்யப் புறப்படும்பொழுது அவைகளை எதிரிகள் சமீபத்திலுள்ள மலைகளிலிருந்து கவனித்துவருகிறார்களென்று அறிவார்கள். ஆகிலும் பிரிடிஷாரின் கட்டுப்பாட்டிலுள்ள அரக்கான் நதிகளில் இரவு நடமாட்டத் தடை உத்தரவு ஏற்பட்டிருப்பதினால் அதை அமுல் நடத்தும் பொருட்டு இந்தச் சிறிய மோட்டார் கப்பல்கள் ரோந்து செய்கின்றன. இரவில் நடமாடக்கூடிய படகுகள் அபாயத்துக்குட்பட்டவை.

நாப் நதிசெல்லும் வரையில் இந்தச் சிறிய கப்பல்களின் கதை எனக்கு அறிவிக்கப்படவில்லை. ஜப்பானிய ஸ்தானங்களை கண்காணிப்பு, ரோந்து, பீரங்கிகள்மூலம் தாக்குவது என்ற நடவடிக்கைகளுடன் அவைகள் அபாயம் பொருந்திய ரகசியமான வேலைகளிலும் ஈடுபடுகின்றன. ஜப்பானியர்கள் அடுத்தபடியாக என்ன நேரிடுமென்று அஞ்சியிருப்பதால் சுரங்கவெடி பாவும் படகுகள் அசைந்து செல்லுவதை மலைகளிலுள்ள ஜப்பானியர்கள்

கண்டவுடன் சுளுந்துகளைக் கொளுத்தி அடுத்த கண்காணிப்பு ஸ்தலத்திற்குத் தகவல்களை அனுப்பிவிடுவார்கள். மேலும் முன்னணியிலுள்ள ஜப்பானிய ரோந்துப் படைகள் தங்களுக்குத் தேவையான ஆகாரம் வெடிமருந்துகளைக் கொண்டுவரும் படகுகளை பிரிடிஷ் கடற்படையும் பிரிடிஷ் விமானப்படையும் வழிமறித்துவிடுமென்றும் பயப்படுகிறார்கள்.

ஜப்பானியர்கள் தினசரி ஒரு கை அரிசியைத்தின்று அநேக வாரங்கள் வரையில் ஜீவித்திருக்கக்கூடுமென்று உலகத்தில் அநேகர்கள் எண்ணம் கொண்டிருக்கிறார்கள். ஆகிலும் ஜப்பானியர்களும் மற்றவர்களைப்போல சமத்வமுள்ள ஆகாரத்தை உட்கொள்ளவேண்டும். ஐரோப்பியர்களுக்கு ரொட்டி நிரந்தரமான ஆகாரமென்றாலும் அவர்கள் அதை மட்டும் நம்பியிருக்கமுடியாது. அதுபோல் ஜப்பானியர்களும் அரிசியை மட்டும் நம்பியிருக்க முடியாது.

முற்றுகை பலப்படுத்தப் பட்டுவிட்டது.

உணவுப்பொருள்கள் வராமல் முற்றுகை செய்யப்பட்டும் முன்னணி ஸ்தலங்கள் தேவையான வெடி மருந்துகளையும், உதவிப்படைகளையும் பெறமுடியாமலும் நிலமை ஏற்பட்டுவிட்டதால் ஜப்பானிய யுத்த முயற்சிக்குக் குந்தகம் நிச்சயமாக ஏற்படும். நேசதேசத்தார்கள் ஜப்பானை இருபுரத்திலிருந்து நசுக்கிவருகிறார்கள். இந்துமகா சமுத்திரப்பக்கத்திலும் முற்றுகை பலப்படுத்தப்படும். பிரிடிஷ் கடற்படையில் சூபர் சண்டை விமானமும் சேர்க்கப்பட்டிருக்கிறதென்று சமீபத்தில் வெளியிடப்பட்டருக்கிறது. இதுதான் பயர்பிளை என்பது. இந்த விமானம் மற்ற எந்த கடல் விமானத்தையும்விட அதிகதூரம் செல்லக்கூடியது. அதன் அடிக்கும் சக்தியும் அபாரமானது. அதில் 20 மிலிமீடர் வாயுள்ள நான்கு பீரங்கிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அது தூரக்கிழக்குப் போருக்காகவே தயாரிக்கப்பட்டது.

ஜப்பானியத் தற்காப்புப் படைகளுக்கு அவசியமான சாமான்களைக்கொண்டுவரும் ஜப்பானியக் கப்பல்களைத் தாக்கி அழிப்பதுதான் அவைகளின் முக்கிய வேலையாக இருக்கும். நான் அந்த விமானிகளுடன் சம்பாஷணை செய்திருக்கிறேன். ஜப்பானிய மாலுமிகள் இதை துவேஷிப்பார்களென்று உறுதிகொண்டிருக்கிறார்கள்.

கடலில் ஜப்பானின் தற்காப்பு யுத்த தந்திரம்.

பஸிபிக் போரின் ஐந்தொகை.

(கிளாஸ்கோ ஹெரால்ட்).

ஜப்பானிலிருந்த கடல் யுத்த நிபுணரான கடற் தளபதி டோகோ பின்வருமாறு எழுதினார். "யுத்தத்தில் எச்சரிக்கையுடன் இருப்பதுதான் மிகவும் முக்கியமானது. போருக்குப் பின் வருந்தத்தக்க அநேக விஷயங்கள் இதற்கு முன் சம்பவித்திருக்கின்றன." பிலிப்பைன்ஸுக்கருகில் நடைபெற்ற கடற்போரின் விவரங்கள் அதிகமாக பகிரங்கப்படும்பொழுது சென்ற சில நாட்களாக டோகோவின் அறிவு மிக்க வார்த்தைகள் டோக்கியோவில் ஞாபகத்துக்கு வந்தன. ஜப்பானுக்கு ஏற்பட்ட இரண்டு யுத்தக் கப்பல்கள், நான்கு விமானந்தாங்கிகள், எட்டு சஞ்சாரிகள், அநேக நாசகாரிகளின் நஷ்டத்தை எவ்விதம் நோக்கினாலும் எதிரியின் போர்ப் படைக்கு பலமான அழிவைத்தான் குறிப்பிடுகிறது.

ஜப்பானுக்கு ஏற்பட்ட கப்பல்களின் நஷ்டத்தைவிட—இந்த நஷ்டம் 1941-ம் வருஷம் பெர்ல் துறைமுக நடவடிக்கைக்குப்பின் ஜப்பான் கட்டியிருக்கும் கப்பல்களைவிட அதிகமாக இருக்காது.—அமெரிக்காவுக்கு ஏற்பட்ட கப்பல் நஷ்டம் மிகவும் குறைவானதென்பது குறிப்பிடத்தக்கது.

இரண்டு வருஷங்களுக்கு முன் மிட்வேத்தீவுகளிலும், பவளக்கடலிலும் கிடைத்த வெற்றிகளுக்குப்பின் தொடர்ச்சியாக ஏற்பட்ட இந்த மகத்தான வெற்றிக்கு உதவியளித்த காப்டன்கள், சேவைப் படைகளின் உயர்தரமான யுத்த தந்திரத்துக்கும், கடற்படைப் பயிற்சிக்கும், அமெரிக்காவுக்கு நமது பாராட்டைத் தெரிவிப்பதுதான் இயல்பான நடவடிக்கை. ஆகிலும் வாஷிங்டனிலிருந்து வரும் விமான புள்ளி விபரங்கள் கடற்படையை ஓட்டுவதிலும், பீரங்கிப் பிரயோகத்திலும் புதிய விசித்திரமான அம்சங்களை வெளிப்படுத்தியிருக்கின்றன. ஜப்பானிய கடற் தளபதிகள், ஜப்பானுக்குக் கடற்படை வெற்றி கிடைத்து விட்டதென்று ஒலிப்பெருக்கியதைக் கேட்டு ஏமாற்றமடைந்து விட்டார்கள். அந்த ஒலிப்பெருக்கு ஜப்பானியர்களைத் திருப்தி செய்ய வெளியிடப்பட்டது. ஜப்பானிய கமாண்டர்கள் அதை நம்பி கடற்படையை நடத்திச் சென்று தோல்வியுற்றார்கள்.

வாஸ்தவமாக நடைபெற்றது பின்வருமாறு.—ஜப்பானியர்களின் சிறிய கப்பற் கூட்டம் வெகு தூரத்திலுள்ள அமெரிக்கக் கடற்படையின்பேரில் பீரங்கிப்பிரயோகம் செய்தது. டோகியோ இதை மிகைப்படுத்திவிட்டது. ஜப்பானிய கனமான கப்பல்கள் எதிரியிட்முள்ள கப்பல்களை அழிக்க இதுதான் நல்ல தருணமென்று முன்னேறி வந்தன. டோகோவின் முன்னெச்சரிக்கை போதனைகள் இப்பொழுது பயன்படாது என்று அவர்கள் வாதாடினார்கள். கெடுவான் கேடு நினைப்பான். மேலும் ஜப்பானியர்களே தங்களுடைய கட்டுக்கதையான ஒலிபெருக்குகளின் பயனை அனுபவித்து விட்டார்கள்.

அக்டோபர் 6-ம் தேதியன்று அமெரிக்கர்கள் பாலாத்தீவை ஆக்கிரமித்தபின் ஒரு மாதத்திற்கு முன் பார்மோஸாத் தீவுக்கருகில் ஒரு பெரிய கடற்படை வெற்றி கிடைத்ததென்று டோக்கியோ பாத்தியம் கொண்டாடிற்று. மூன்று நாளைக்குப் பின் அமெரிக்கர்கள் பிலிப்பைன்ஸில் இறங்கியதன் மூலம் இது தவறென்று நிரூபணம் செய்யப்பட்டது. டிர்பிட்ஸ் மூழ்கடிக்கப்பட்ட பின் பிரிடிஷ் கடற் படையும் தூரக்கிழக்குக்கு வந்துவிடுமாகையால் அதுவும் அமெரிக்க கடற்படையும் ஒன்றுபட்டுவிட்டால் இதுவும் ஒரு தெய்வானுகூலம் என்றும் எதிரி இனிமேல் அவ்வளவு சுலபமாக நம்பிக்கைகொள்ளமாட்டாரென்றும் நினைத்து விடுவார்கள். தற்காப்பு முறையை கையாளவேண்டுமென்டு கடற்தளபதி டோகோ சொன்ன வார்த்தைகளை தோல்வியுற்ற ஜப்பானியர்கள் இப்பொழுது நன்றாய்க் கடைபிடித்து வருகிறார்கள். ஆனால் தற்காப்பு யுத்தம் யுத்தத்தில் வெற்றியளித்துவிடாது.

காய்கறிகளை அதிகமாகப் பயிரிடுங்கள்.

(மதராஸ் விவசாயப் பஞ்சாங்கம்).

சமாதான கால நிலைமை யுத்த காலத்தில் மிகவும் மாறுபட்டிருப்பது அனைவருக்கும் நன்கு தோன்றும். விரைந்து செல்லும் போக்குவரவு சாதனங்கள் அனைத்தும் அவசியம் என்று கருதப்படும் ராணுவம் போன்றவைகளுக்கே அநேகமாக உபயோகப்பட்டுவிடும். வியாபாரச் சரக்குகளை வெகுதூரம் எடுத்துச் செல்வது சுலபமல்ல. ஆகையால் ஒவ்வொரு பகுதியிலும் அதனதன் தேவைகளை தானே அடைவதற்கு வேண்டிய பிரயத்தனம் செய்ய வேண்டும். அதுவும் உணவுப்பொருள்கள் விஷயத்தில் இது மிகவும் அவசியம்.

உலோக வகைகள் பெரும் கைத்தொழில்கள் சம்பந்தப்பட்டமட்டில் ஒவ்வொரு பகுதியிலும் தனது தேவைகளை பூர்த்தி செய்துகொள்ள பெரு முயற்சியும், சாதனமும் அவசியமாக இருக்க தனக்குத் தேவையான உணவுப்பொருள்களை ஒவ்வொரு பாகத்திலும் தானே தேடிக் கொள்வது என்பது மிகவும் சுலபமானது. தக்க பண்படுத்தலினாலும் எருவிடுவதினாலும் ஏதாவது ஒரு பயிரை எந்த நிலத்திலும் உண்டுபண்ணிவிடலாம். நிலத்திற்கும் சீதோஷ்ண ஸ்திதிக்கும் தக்க பயிர்களை தெரிந்தெடுத்துக்கொள்வது மிகவும் அவசியம்.

நெல், சோளம் போன்ற பிரதானமான உணவுப்பொருள்களைப் பயிரிட அதிக விஸ்தீர்ணமும், கலப்பைகள், எரு போன்ற சாதனங்களும் தேவை. நம் கிராமவாசிகளோ இந்தப் பிரச்னையை தங்களால் இயன்றமட்டும் தீர்த்துவிடுகிறார்கள். காய்கறிகளைப் பயிரிடுவது சுலபமானது. பட்டணங்களில் வசித்துவரும் ஜனங்கள் தங்கள் சாவகாச நேரங்களில் இதை சற்று கவனித்தால் போதும். வீட்டுச் சுற்றுப்புறங்களிலேயே காய்கறிகளைப் பயிர் செய்யலாம். இப்பொழுதோ இருக்குமிடத்தை அழகுபடுத்தும் நோக்கத்துடன் சிலர் பூஞ்செடிகளையும், குரோட்டன் வகைகளையும் இன்னும் படரக்கூடிய பற்பல செடிகளையும் வளர்க்கிறார்கள். இவைகளுக்குப் பதிலாக காய்கறிகளைக் கொடுக்கக்கூடிய செடிகளை பயிர் செய்து உணவுப்பொருள் பிரச்னையை வெகுவாகத் தீர்த்துக்கொள்வது மிகவும் சாத்யமானதே. இப்பொழுது குரோட்டன் போன்ற செடிகளால் வீடுகளின் சுற்றுப்புறத்தை அலங்கரிப்பது போலவே தகுந்த காய்கறிச் செடிகளைக்கொண்டும், தேவைக்குத் தகுந்தபடி நட்டுப் பயிர் செய்வதன்மூலம் அழகுபடுத்திக்கொள்ளலாம். ஒவ்வொருவரும் தன் தன் காய்கறித் தேவையை சிறிதளவு பூர்த்திசெய்துகொண்டால் அது தேசீய உணவுப் பிரச்னையை வெகுவாகத் தீர்க்க ஏதுவாகும். வீட்டுச் சுற்றுப்புறங்களில் காய்கறிகளைப் பயிரிடுவதில் மற்றொரு முக்கியமான சிக்கனத்தன்மையும் இருக்கிறது. நல்ல உணவு என்று சொல்ல உஷ்ணம் தரத்தக்க சத்து ஏதேனும் ஒரு இந்திரிய அல்லது உப்பு வாயு சம்பந்தமான

உணவுப்பொருள் ஒன்றிலிருந்துமட்டும் கிடைப்பதாய் இருந்தால் மட்டும் போதாது. உயிர் சத்து என்னும் வைட்டமின்கள் அதிகமாயுள்ள சரிசம சாப்பாடே தேகத்திற்கு தேவையாக இருக்கிறது. சாப்பாட்டை சரி சமமாக்கவும் உயிர்ச்சத்துக்களைக் கொடுக்கவும் காய்கறிகளே முக்கியமானவை. உணவின் இத்தன்மையை கவனிக்காவிட்டால் ஒருவர் பற்பல வியாதிகளுக்கு உள்ளாவது நிச்சயம். தவிரவும் வைத்தியச் செலவும் அதிகரித்துக்கொண்டே போகும். வீட்டுச் சுற்றுப்புறங்களிலே காய்கறிகளை உண்டுபண்ணுவதினால் கீழ்க்கண்டவைகள் சித்தியாகும்.

(1) தேசீய உணவுப் பிரச்னையைத் தீர்த்துக்கொள்ளலாம்.

(2) சிக்கனப் பயிர் செய் முறையால் வீட்டை அழகுபடுத்திக்கொள்ளலாம்.

(3) திடகாத்திரர்களாக இருக்க தேவையான தேகப்பயிர்ச்சி கிடைக்கின்றது.

(4) தேவையான உயிர்ச்சத்துக்களை அடைவதால் வைத்தியச் செலவையும்குறைத்துக் கொள்ளலாம்.

ஆகையால் உங்கள் வீட்டுச் சுற்றுப்புறங்களில் அதிகமான காய்கறிகளைப் பயிரிடுங்கள்.

குறிப்பு :—விதைகளுக்கும், இதர விஷயங்களுக்கும் அருகாமையிலுள்ள விவசாய டிமான்ஸ்ட்ரேட்டரைக் கேளுங்கள்.

யுத்தத்துக்குப்பின் உலக சீர்திருத்தம்.

17. " கைத்தொழில் அபிவிருத்தி ".

சொற்பொழிவாளர்கள் :—மிஸ்டர் விக்ஹாம் ஸ்டீட் (தலைவர்).
ஸர் மைல்ஸ் தாமஸ்.
ஸர் ஆடுல் சாடர்ஜி.

(1944-ம் ௵ நவம்பர் மாதம் 6-ம் தேதியன்று தூரக்கிழக்கு நாடுகளுக்குச் செய்யும் பி. பி. ஸி. ஒலிபரப்புப் பிரசங்கம்).

ஸ்டீட் : இன்று இந்தியாவை தொழிற்சாலை மயமாக்கும் விஷயத்தை எடுத்துக்கொள்ளுவோம். தொழிற்சாலைகளின் இஞ்ஜினியரின் இலாகா நிபுணரான ஸர் மைல்ஸ் தாமஸை இந்த பிரச்னையை எவ்விதம் ஆராய்ச்சி செய்யலாமென்று முதலில் கேட்கிறேன்.

தாமஸ் : அதன் க்ஷேமத்தைக் கோரி இந்தியா அதன் ஆஸ்திகளை நல்ல முறையில் உபயோகிக்க வேண்டும். இந்தியாவின் ஆஸ்தி அளவை நாம் கணக்கிட்டால் உபயோகமுள்ளதாக இருக்கும். முதலாவது இந்தியாவின் வியாபாரஸ்தலங்கள். இந்தியாவின் வாழ்க்கை முறை மற்ற நாடுகளைப்போல் அவ்வளவு உயர்வானதல்ல. ஆனால் இந்தியா அதன் வாழ்க்கையை அதிகரித்துவந்தால் இந்தியாவின் சில பாகங்களில் உற்பத்திசெய்யக் கூடிய பொருள்களுக்குத் தானாகவே விநியோகம் ஏற்படும் நிலைமை தானாகவே ஏற்பட்டு விடும். அந்தச் சாமான்களை உற்பத்தி செய்வதில் அதிகத் தொழிலாளர்களைச் சேர்த்து விட்டால் இந்தியாவிலுள்ள ஜனங்களின் பெரும்பான்மையோருக்கு அதிகச் சம்பளம் வழங்கியதாகும். மேலும் அவர்களுக்குத்தேவையான உணவுப்பொருளுக்கும் ஆடைகளுக்கும் நல்லவிலைகொடுத்து வாங்கக்கூடிய சக்தியும் அவர்களுச்கு ஏற்படும். இந்தியர்களிடம் வேலைசெய்யும் சக்தி அபாரமாக இருக்கிறது. இந்தியாவின் உற்பத்தி சக்தியும் அங்கு கிடைக்கக்கூடிய தொழிலாளர்களையும் பற்றி நமக்கு நல்ல அனுபவம் கிடைத்திருக்கின்றன. தொழிலாளர்களை ஒழுங்குபடுத்தி அவர்களுக்கு அதிகமான சம்பளம் பெறக்கூடிய வழியைக்காட்டினால் அவன் யுக்தியுள்ள நல்ல வேலைக்காரனாக இருப்பான்.

ஸ்டீட் :—இந்தியா ஒரு வியாபார ஸ்தலம் என்று சொன்னீர்களே? அது உள்நாட்டு வியாபார ஸ்தலமா அல்லது ஏற்றுமதிக்கும் இறக்குமதிக்கும் லாயக்கு உள்ளதா?

தாமஸ்: இரண்டும்தான். இந்தியா சுபிக்ஷமாக இருக்கவேண்டுமென்றால் அதன் வியாபார ஸ்தீலங்களில் இந்தியா உற்பத்தி செய்த பொருள்கள் மிகுதியாக இருக்கவேண்டும். பிரிடனிலும் அமெரிக்காவிலும் மற்ற உயர்வான தொழிற்சாலை நாடுகளிலுமுள்ள சாமான்களை இறக்குமதிசெய்து வந்தால் இந்தியாவின் ஐஸ்வர்யம் உலகத்தின் மற்ற பாகங்களில் செலவிடப்பட்டுவிடும். அதன்மூலம் பொருளாதார சமத்துவம் குறைந்து விடும்.

ஸ்டிட்: ஸர் ஆடில் சாடர்ஜி, நீங்கள் இதை ஒப்புக்கொள்ளுகிறீர்களா?

சாடர்ஜி: நான் தாமஸைப் பூராவாக ஆதரிக்கிறேன். மேலும் இந்தியாவில் தொழில் அபிவிருத்தி ஏற்பட்டால் இந்திய விவசாயினிடம் கூலிவேலை செய்பவரும் தங்களுக்குத் தேவையான பொருள்களை மலிவாக வாங்கிக்கொள்ளக்கூடும். அவர்களின் வாழ்க்கை நிலைமையும் உயர்ந்துவிடும். ஆகிலும் தாமஸை நான் ஒரு கேள்வி கேட்கிறேன். இந்தியா மற்ற நாடுகளின் பொருள்களை பஞ்சைப்போல் உறுஞ்சக்கூடாதென்று சொன்னதின் அபிப்பிராயமென்ன? நிச்சயமாக இறக்குமதி செய்யப்படும் பொருள்களுக்கு இந்தியா விலைகொடுக்கவேண்டியதுதானே. இந்தியாவில் மிகுதியாக உள்ள தாவரப்பொருள்களை ஏற்றுமதிசெய்யக்கூடாதென்றும், அயல் நாடுகளிலிருந்து ஒன்றையும் இறக்குமதிசெய்யக்கூடாதென்றும் நீங்கள் சொல்லுகிறீர்களா?

தாமஸ்: கூடுமான வரையில் இந்தியாவிலுள்ள தாவரப் பொருள்களை இந்தியாவின் தேவைக்குரிய பொருள்களைத் தயாரிப்பதில் கூடுமான அளவிற்கு உபயோகப்படுத்தவேண்டும். இந்தியாவிலுள்ளவர்களுக்கு இந்தியத்தொழிற்சாலைகளிலேயே வேலைக்கு வசதி அளிப்பதுதான் முக்கியமான பிரச்னை. எல்லா இஞ்ஜினியரிங் தொழிற்சாலைகளும் தொழிலாளர்களை உபயோகிக்கும் முறைகளைப்பற்றி யுத்தகாலத்தில் அநேக விஷயங்களைத் தெரிந்துகொண்டிருக்கிறார்கள். இந்தியாவில் ஏராளமான தொழிலாளர்கள் கிடைத்து வருகிறார்களென்பதுதான் இந்தியாவின் மகத்தான செல்வம். மோட்டார்கார்கள், ரெபிரிஜரேடர்கள், சுத்திசெய்யும் யந்திரங்கள், வீடுகளில் உபயோகப்படுத்தும் மின்சார சாமான்கள், பிட்டிங்குகள், விவசாயக்கருவிகள், முதலியவற்றை கவனிப்போம். இந்த சாமான்களை உற்பத்தி செய்யக்கூடிய பெரிய தொழிற்சாலைகளை ஏன் அமைக்கக்கூடாதென்று நான் கேட்கிறேன். அந்த சாமான்களை இந்தியாவிலேயே விற்று பொருளாதார சமத்துவத்தை அடைந்துவிடலாமே.

ஸ்டிட்: பரிஷ்காரமான முறையில் இந்தியாவில் தொழிற்சாலைகள் ஆரம்பிக்கக்கூடுமென்று நினைக்கிறீர்களா? சிக்கலாக இல்லாத பாகங்களை இந்தியாவில் உற்பத்திசெய்துவிடலாமென்று வைத்துக்கொண்டாலும் யந்திரங்கள் அதற்குக் கிடைக்கவேண்டாமா?

தாமஸ்: இது நல்ல பிரச்னைதான். நான் சொன்ன சாமான்கள் பூராவையும் இந்தியா உற்பத்தி செய்வதென்றால் அது நவீன நடைமுறைக்குப் பிற்போக்காகத் தானிருக்கும். இஞ்ஜினியரிங்கிலும், ஆடைகளிலும் ஒருவிதமான நாகரீகம் இருக்கிறது. இந்த நாகரீகத்தில் பிரிடனிலும் அமெரிக்காவிலும் நிச்சயமாக முன்னேற்றம் ஏற்பட்டுவருகிறது. மிகவும் சிக்கலான யந்திரங்களை இந்தியா முதலில் இறக்குமதி செய்துகொண்டு அதன் தொழிற்சாலைகளை ஆரம்பிக்கவேண்டும். சுத்திசெய்யும் யந்திரம் தேவையென்றால் அதற்கு அவசியமான மின்சார மோட்டாரை இந்தியாவில் உற்பத்திசெய்ய முடியாது. ஆனால் அதன் மூடி, மற்ற உலோக உருப்புகள், அமைப்பு முதலியவற்றை இந்தியத் தொழிலாளர்களின் உதவிகொண்டே செய்துவிடலாமல்லவா.

ஸ்டிட்: நீங்கள் மின்சார யந்திரங்களைப்பற்றிப் பேசும்பொழுது நீர்வீழ்ச்சி சக்தியைப்பற்றி எனக்கு ஞாபகம் வருகிறது. சாடர்ஜி, இந்தியாவின் மின்சாரசக்தி நிலமை என்ன? அங்கு நிலக்கரி எவ்வளவுதூரம் குறைவாக உபயோகப்படுத்தப்படுகிறது.

சாடர்ஜி: இந்தியாவில் அநேக இடங்களில் நீர்வீழ்ச்சியிலிருந்து மின்சார சக்தி எடுக்கப்படுகிறது. இன்னும் அநேக பெரிய திட்டங்களும் ஏற்பாடாகிவருகின்றன. அவைகளும் விரிவுபடுமென்றும் நினைக்கிறேன். இந்தியாவில் நிலக்கரி வங்காளத்திலும் பீஹாரிலும்தான் மிகுதியாக இருக்கின்றன. இன்னும் சில இடங்களிலும் சொல்ப அளவுக்கு நிலக்கரி கிடைக்கக்கூடும். ஆகையால் மின்சாரசக்தியை இந்தியாவில் மிகுதியாக அதிகரித்தால் இந்தியாவுக்கு உபயோகமுள்ளதாக இருக்கும். நிலக்கரிச்

சுரங்கங்களிருக்கும் இடங்களிலிருந்து வெகு தூரத்திலுள்ள இடங்களுக்கு இது லாபகரமாக இருக்கும். மின்சாரசக்தி பம்பாய், மதராஸ், மைசூர் முதலிய இடங்களிலும் வடக்கே ஹிமய பருவதம் வரையிலும் மற்ற இடங்களிலும் உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது.

ஸ்டீட் : தாமஸ், கிரிட் ஏற்பாட்டின் உபயோகத்திற்கு ஏதாவது வரம்பு உண்டா? நீர்வீழ்ச்சியிலிருந்து உண்டாகும் மின்சாரத்தை சக்திக்குறைவன்னியில் வெகுதூரம் வரையில் கொண்டுபோக முடியுமா?

தாமஸ் : மின்சாரத்தை வெகுதூரம் கொண்டுபோனால் அதன் சக்தி ஒரு சிறிது குறைவுபடும். ஆகிலும் ஸர் ஆடில் சொல்லுகிறபடி இந்தியாவில் மலைபிராந்தியமில்லாத இடங்களில் பூராவாக மின்சாரசக்தி ஸ்தாபனங்களை அமைத்துவிடலாம். மின்சார நிலயங்கள் அமைக்கப்பட்டுவிட்டால் அதற்குத்தேவை அதிகரிக்கும். இவ்விதமாக பொருளாதார நிலமை உருவாக அமைக்கப்பட்டுவிடும்.

சாடர்ஜி : நான் இதை ஒப்புக்கொள்ளுகிறேன். வடக்கு இந்தியாவில் கிரிட் திட்டம் இருந்து வருகிறது. பம்பாயிலிவுள்ள ஆலைகள் மின்சார சக்தியில் ஓட்டப்படுகின்றன. கொஞ்ச காலத்துக்குமுன் இந்தியாவின் மின்சாரசக்தி நிலமை பரிசீலனை செய்யப்பட்டது. ஆகிலும் மறுமுறை ஆராய்ச்சி செய்யவேண்டியது அவசியமாகும். இது இந்தியாவின் மிகவும் முக்கியமான ஆஸ்திப்பொருப்பு. வங்காளத்துக்கு வெளியில் போக்குவரத்துக்கு லாயக்குள்ள நதிகளும் கால்வாய்களும் மிகுதியாக இருக்கவில்லை. நிலக்கரியை இருப்புப் பாதை மூலம்தான் கொண்டுபோக வேண்டியிருக்கிறது. ஆகையால் மின்சாரசக்தியை அபிவிருத்திசெய்ய நாம் எல்லாவிதமான முயற்சிகளையும் செய்துவரவேண்டும்.

தாமஸ் : ஏராளமான தொழிலாளர்களும் மின்சார சுக்தியும் கிடைத்துவிட்டால் அபிவிருத்திக்குத்தகுந்த ஆஸ்பதம் கிடைத்துவிடும்.

ஸ்டீட் : இந்த அபிவிருத்தி ஏற்படுமென்று 50 வருடங்களுக்குமுன் நினைத்திருக்கவே முடியாது.

தாமஸ் : இல்லை.

ஸ்டீட் : தொழிலாளர்களும், தாவரப்பொருள்களும், மின்சார சக்தியும் ஏராளமாகக் கிடைத்துவிட்டால் இந்தியாவில் தொழிலபிருத்திக்கு யாதொரு வரம்பும் இருக்காது. ஆகிலும் தொழிலபிவிருத்தி பணக்கார கம்பெனிகளின் லாபத்துக்கும் அல்லது ஏகபோக அனுபவமுள்ளவர்களுக்கும் மட்டும் ஏற்பாடு செய்யக்கூடாது. பொது ஜனங்களின் வாழ்க்கை முறையை உயர்த்தக்கூடிய வகையில் அதன் பிரயோஜனம் எல்லா ஜனங்களுக்கும் ஏற்படவேண்டும்.

தாமஸ் : பிரிடனும், அமெரிக்காவும், இந்தியாவும், இந்தியா ஒரு பெரிய ஏரியென்றும் அதில் தூண்டியைப்போட்டுப் பெரிய மீனைப்பிடித்துவிடலாமென்றும் நினைக்காமல், இந்தியாவிலுள்ள ஐஸ்வர்யங்களைத் தன்னிச்சையாக விருத்திபெறும்படி செய்து இந்தியா முன்னேற்றமடைய வேண்டுமென்று நினைக்கவேண்டும். இதற்கு முன்னதாக அநேகர்கள் இந்தியாவிலிருந்து அநேக லாபங்களை அடையலாமே ஒழிய அதில் பொருளையும் அறிவையும் ஈடுபடுத்தி, இந்தியாவை அபிவிருத்தி அடையும்படி செய்யமுடியாதென்று எண்ணியிருந்தார்கள்.

சாடர்ஜி : இந்தியாவில் ஏராளமான தொழிலாளர்களிருக்கிறார்களென்று சொன்னீர்களே? பயிற்சி இல்லாததால் இந்தியத் தொழிலாளர்கள் அவ்வளவு திறமை வாய்ந்தவர்கள் அல்லஎன்று கேள்விப்பட்டிருக்கிறேன். அதைத்தவிர சுகாதாரமும் கல்வியும் குறைவாகயிருக்கின்றன. இந்தியாவில் தொழிற்சாலை அபிவிருத்தியில் இந்த விஷயங்களும் கவனிக்கப்படவேண்டும்.

தாமஸ் :—என்னுடைய அனுபவத்திலிருந்து, போஷணையும், கல்வியும் வேலைக்காரர்களுக்குத் திறமையைக்கொடுக்கக்கூடியது. சரியான ஆகாரமில்லாமல்போனால் களைப்பு சீக்கிரம் ஏற்படுகிறது, வேலையின் அளவும், தரமும், தீக்ஷிண்யமும் குறைவுபடுகிறது. கல்வி சம்பந்தப்பட்டமட்டில் யுத்த அனுபவத்திலிருந்து போதுமான பயிற்சி அவசியமென்று அறிந்துகொண்டிருக்கிறோம். யந்திர சாதனங்களின் நுண்ணறிவுடன்

அவைகளை ஓட்டும் சக்தியும் அவர்களுக்குப் போதிக்கப்படவேண்டும். இந்தியர்கள் எந்த நிலமையையும் சமாளிக்ககூடியவர்களாகையால் அவர்களுக்குப் பயிற்சிஅளித்தால் அபார விளைவுகள் ஏற்படும்.

ஸ்மிட் :—அதிக ஊதியம்பெறக்கூடிய தொழிலாளர்களிருந்தாலும் குறைவான பொருமான முள்ள சாமான்கள் உற்பத்தி செய்யப்படலாம். நல்ல யந்திர சாதனங்களும் திறமை வாய்ந்த வேலைக்காரர்களும் கிடைத்துவிட்டால் அதிலிருந்து உற்பத்தியாகும் பொருள் கள் விலை குறைவாகத்தானிருக்கும். குறைவாக ஊதியம் பெறும் வேலைக்காரர்கள் உற்பத்திசெய்யும் பொருள்கள் அதிக விலையுள்ளதாகத்தானிருக்கும். இந்தியத் தொழி லாளர்களுக்குப் பயிற்சி அளித்துவிட்டால் அவர்கள் இந்திய வியாபார ஸ்தலங்களுக் குறிய பொருள்களை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யும் பொருள்களைவிட குறைவான விலைக்கு உற்பத்திசெய்து சப்ளைசெய்துவிடலாம்.

சாடர்ஜி : சரிதான். இந்தியாவில் தொழிற்சாலை அபிவிருத்திக்குமுன் இந்தியத் தொழிலாளர் களுக்குப் பயிற்சி அளிக்கப்படவேண்டும்.

தாமஸ் : இந்த விஷயத்தை விவரித்துச்சொல்ல விரும்புகிறேன். தற்பொழுதிருக்கும் தொழிற்சாலை நிலமையில் தொழிலாளர் வாங்கிச் சாப்பிடுகிறவர்களும் விற்கக்கூடிய பொருள்களை உற்பத்தி செய்கிறதில்லை. தொழிலாளர்கள்தான் ஜிக்குகள், கருவிகள், கவறுகள், மற்றுமுள்ள சிக்கலான சாதனங்களையும் உண்டுபண்ணுகிறார்கள். அவைகளின் உதவியைக் கொண்டுதான் தேர்ச்சிபெறாத தொழிலாளர்கள் சாமான்களைத் தயாரிக் கிறார்கள், பொதுஜனங்கள் அவைகளை விலைக்கு வாங்குகிறார்கள். நான் ஒரு உதாரணம் சொல்லுகிறேன். இந்தியாவில் குடங்களுக்கும் மற்றுமுள்ள பாண்டங்களுக்கும் பித்தளை உபயோகப்படுத்தப்படுகிறது. நாம் சைனா, போர்ஸ்லென் பாத்திரங்களை உபயோகித்து வருகிறோம். இந்தப் பித்தளைப் பாத்திரங்களை இந்தியத் தொழிலாளிகள் கடைகளில் தனிப்பட்டமுறையில் அடிக்கிறார்கள். பாத்திரங்களும் பரிஷ்காரமாகவும் வேலைப் பாட்டுடனும் தயாரிக்கப்படுகின்றன. இங்கிலாந்தில் ஏ. ஆர். பி. வார்டனுக்கு அவசிய மான தொப்பிகளைத் தயாரிக்கவேண்டியிருந்தபொழுது ஒருவர் ஒரு தொப்பியைத்தான் தயாரிக்க முடியுமென்று புலப்பட்டது. நாம் யந்திர சாதனங்களை அமைத்து வேலை செய்ய ஆரம்பித்தபின் அவைகள் ஒரு நாளைக்கு ஆயிரம்விதம் உற்பத்தி செய்யப்பட்டன.

ஸ்மிட் : இந்தியாவிலும் இவ்விதமாக ஏராளமான உற்பத்தி முறையை நாம் ஏன் கையாளக் கூடாது?

தாமஸ் : இந்தத் தொழிலாளியிடமுள்ள சாதுர்யத்தை நவீன உற்பத்தி முறைகளில் வழி படுத்தவேண்டும். இந்த அம்சத்தையும் நாம் நன்கு பரிசிலனை செய்யவேண்டும். புதியயந்திர சாதனங்களை வாங்குவதில் முதலீடு செய்வது மட்டும் போதாது. வேலையாட் களுக்கு வேலை செய்யக்கூடிய சக்தியையும், யந்திரங்களை ஓட்டக்கூடிய நிபுணர்களின் அறிவையும் அதிகரிக்க நாம் முயற்சி செய்யவேண்டும். அவர்கள்தான் அதிக உற்பத்திக் குறிய கருவிகளைத் தயாரித்துக் கொடுக்கக்கூடியவர்கள்.

ஸ்மிட் : இந்நாட்டில் அந்த முறையைக் கையாண்டு வருகிறோம். வாலிபமாக இருக்கும்பொழுது, எஞ்ஜினுக்கு அவசியமான கம்பிகளை உற்பத்தி செய்வது சிறந்த வேலையாகயிருந்தது என்று ஒரு இஞ்ஜினியர் என்னிடம் சொல்லியிருக்கிறார். ஆனால் இப்பொழுது ஒருவன் ஆறு கம்பிகளை கடசற்பட்டறையில் கொடுத்துவிட்டால் அவைகள் உடனேயே வேலைக்கு லாயக்காகத் தயாரிக்கப்பட்டுவிடும். ஏதாவது தவறுதல் ஏற்பட்டால் உடனே பிட்டரைக் கூப்பிட்டு அதைச் சரிப்படுத்திவிடலாம். மற்றும் சில விஷயங்களில் அவ் விதம் செய்துவிட முடியாது. இந்தியாவில் குதிரை சக்தியுள்ள யந்திரங்கள் எவ்வளவு இருக்கின்றனவென்று புரியவில்லை. ஆகிலும் குதிரைகளுக்குள்ள லாடத்தைப் பெரு வாரி முறையில் தயாரித்துவிட முடியாது.

தாமஸ் : யுத்த ஆரம்பத்தில் பெல்ஜியத்திலுள்ள குதிரைகளுக்கு மிலியன்கள் கணக்காக குதிரை லாடங்கள் ஸப்ளை செய்யும் கண்டிராக்டை எனக்குக் கொடுத்தார்கள். இதை யந்திர சாதனங்கள் மூலம் உற்பத்தி செய்வது அசாத்தியமாயிற்று. ஏனெனில் அவை களை பலரகங்களாக இருந்தன. ஆகையால் அந்த வேலையை கிராமங்களிலுள்ள கருமான்

களிடம் ஒப்படைத்தோம். இந்த ஏற்பாடு இந்திய கிராமத்திலுள்ள எல்லாத் தொழில் முறைகளுக்கும் அன்வயிக்கும். ஆங்காங்கு உள்ள தையல்காரர்கள் நல்ல உடைகளைத் தயாரிப்பதை நான் பார்த்திருக்கிறேன். இந்தியாவின் கிராமங்களிலும் குடிசைகளிலுமுள்ள தொழில்முறைகளில் இயற்கையாகவே சாமர்த்தியமிருந்து வருகிறது. அவைகளை இந்த யந்திர சாதனங்களுள்ள காலத்திலும் அபிவிருத்தி செய்யலாம்.

சாடர்ஜி: சுலபமான சாதாரணமான பாகங்களைச் செய்வதுடன் திருப்தியடையாமல் நாம் எல்லா பாகங்களையும் கொஞ்சம் கொஞ்சமாக நாமே செய்துகொள்ளவேண்டும் என்று ஸர் மைல்ஸ் ஒப்புக்கொள்ளுவாரல்லவா.

தாமஸ்: ஆம் அதுதான் என்னுடைய அபிப்பிராயமும். முதலில் நாம் மோட்டார் கார் எஞ்ஜின்கள், பின் அச்சு, மின்சார அமைப்பு முதலிய மிகவும் சிரமசாத்யமான பாகங்களை இறக்குமதி செய்யவேண்டும். இந்த முஸ்தீப்புகளைத் தயாரிக்க நாம் அநேக வருஷங்களாக ஆராய்ச்சி செய்திருக்கிறோம். இந்தியர்கள் நம்மைப்போல் தேர்ச்சிபெற 50 அல்லது 60 வருஷங்களாகும். இந்த சாமான்களை இந்தியா இறக்குமதிசெய்து அவைகளுக்கு அவசியமான, கூடு, மூடிகள், கண்ணாடிகள் முதலிய சாமான்களைத் தயாரித்துவந்தால், இதை அடிப்படையாகக்கொண்டு வருஷா வருஷம் அபிவிருத்தி செய்து இறுதியில் இந்தியாவிலேயே எல்லா பாகங்களையும் செய்யக்கூடிய சக்தி ஏற்பட்டுவிடும்.

சாடர்ஜி: நுட்பமான, கடினமான பாகங்களைச்செய்ய 50 அல்லது 60 வருஷங்கள் செல்ல வேண்டுமென்றால், நாம் உற்பத்தி சம்பந்தப்பட்ட மட்டில் உலகத்திலுள்ள எல்லாநாடுகளையும்விட பிற்போக்கான நாடாக இருக்கமாட்டோமா?

ஸ்மீட்: ஸர் மைல்ஸ் அவ்விதம் சொன்னதாக நான் நினைக்கவில்லை. நீர் தப்பு அபிப்பிராயம் கொண்டுவிட்டீர். இந்தியா ஆரம்பத்திலிருந்து எல்லா பாகங்களையும் செய்வதென்று ஆரம்பித்தால் 50 அல்லது 60 வருடங்களாகும். ஆகிலும் ஆரம்ப காலத்தில் மிகவும் சிக்கலான பாகங்களை இறக்குமதி செய்து சுலபமான பாகங்களைச் செய்துவந்தால் இந்தியா முன்னேற்றமடைந்து விடும்.

தாமஸ்: சரிதான். இந்தியா சாமான்களை இறக்குமதி செய்யாமல் அதன் நுட்பத்தை அறிந்து கொள்ளவேண்டும்.

சாடர்ஜி: நான் தப்பு அபிப்பிராயம் கொண்டதற்கு வருந்துகிறேன். ஆகிலும் இந்த நுட்பமான பாகங்களை இந்தியா எவ்விதம் உற்பத்திசெய்யக்கூடுமென்று தாங்கள் சொல்லவேண்டும். இதற்கு தொழில் நிபுணர்கள் வேண்டும். இந்தியாவில் தொழிற்சாலைகளை ஆரம்பிக்க அயல் நாடுகளிலிருந்து தொழில் நிபுணர்களை வரவழைக்கவேண்டுமென்றும், ஆராய்ச்சி ரஸாயனசாலைகளையும் மற்ற திட்டங்களையும் ஏற்படுத்தவேண்டுமென்று சொல்லுகிறீர்களா?

தாமஸ்: சிலரை வரவழைக்கவேண்டும்தான். ஆகிலும் இப்பொழுது செய்துவருவதுபோல் மோட்டார்கள் போன்ற சாமான்களை பூராவாக இறக்குமதி செய்தால் அவைகளை பரிபாலிப்பது, நல்ல நிலைமையில் வைத்துக்கொள்ளுவது, பழுது பார்ப்பது போன்ற நடவடிக்கைகள் மூலம் தொழிற் பயிற்சி உள்ளவர்கள் உற்பத்தி முறைகளில் முதிர்ச்சி பெற்று விடுவார்கள். ஒருவர் மோட்டாரை அக்கக்காகப் பிரித்து அதை மறுபடியும் பூட்டி விடக்கூடிய சக்தி பெற்று ஐந்து அல்லது ஆறு வருஷங்கள் அனுபவம் பெற்றால் அவன் உற்பத்தி செய்யக்கூடிய சக்தியை அடைந்து விடுகிறான். இறுதியில் அவன் ஒரு உற்பத்தி செய்கிறவராக இருப்பதுடன் அவைகளுக்கு திட்டம் போடவும் சக்திபெற்று விடுவான். என்னுடைய தலைவரான நெபீல்ட் பிரபு முதலில் மோட்டார்கார் பழுது பார்க்கிறவராக இருந்து இப்பொழுது யந்திரங்களின் அமைப்புகளை நன்கு உணர்ந்து முதல் தரமான தொழிலாளியாக ஆகிவிட்டார்.

சாடர்ஜி: எனக்கு ஒருவாறு சந்தேகம். மோட்டார்களைக் கட்டும் சாலைகளிலுள்ள இந்தியர்களை பிரிடனுக்கும், அமெரிக்காவுக்கும் அனுபவம் பெறவும், நவீன முறையில் பயிற்சி பெறவும் அனுப்பலாமா? அவர்களை அவ்விதம் அனுப்பினால் அவர்களுக்குப் போதுமான வசதி அளிக்கப்படுமா, அல்லது வியாபார முறையில் மாத்சரியமேற்படுமா?

தாமஸ்: அவ்விதம் ஒரு மாத்சர்யமும் ஏற்படாது. பிரிடன் சம்பந்தப்பட்ட மட்டில் இந்திய மாணவர்களை பயிற்சி முகாம்களில் வரவேற்போம். என்னுடைய தொழிற்சாலையில் வருஷா வருஷம் 150 பிள்ளைகளுக்குப் பயிற்சியளிக்கக்கூடிய வசதிருக்கிறது. மாணவர்கள் எங்களுடைய தொழிற்சாலையில் வேலைசெய்த பின் சாயங்காலத்தில் தொழில் பயிற்சிப் பள்ளிக்கூடங்களுக்கும் செல்லுகிறார்கள். அவர்களில் வருஷா வருஷம் 10 பேர்களுக்கு சர்வகலாசாலைப் படிப்பும் ஏற்பாடு செய்திருக்கிறோம்.

சாடர்ஜி: அநேக வருஷங்களாக நான் இந்தியாவின் ஹை கமிஷனராக இருந்தேன். மத்திய நிர்வாகமும், மாகாண நிர்வாகங்களும் அனுப்பும் மாணவர்களுக்குப் பயிற்சி பெற வசதியளிப்பதுதான் என்னுடைய முக்கிய வேலையாக இருந்தது. அநேகர்களுக்கு இங்குள்ள தொழிற்சாலைகள் சாதகமாக இருந்தன. சில தொழிற்சாலைகளில் இந்தியர்கள் நமக்கு வியாபார விரோதியாக வந்துவிடுவார்களென்ற உணர்ச்சியேற்பட்டது. இந்தியாவிலிருந்து எஞ்ஜினியரிங் தொழிலைக் கற்றுக்கொள்ள மாணவர் இங்கிலாந்துக்கு வந்தால் இரு நாடுகளுக்கும் சாதகமென்று நீங்கள் சொல்லுவது திருப்திகரமாக இருக்கிறது. இந்த யுத்தத்தில் தொழில் இலாகா மந்திரியான மிஸ்ட்டர் பெவினின் ஆதரவின் கீழ் அநேக இந்தியர்கள் தொழில் பயிற்சி பெற இங்கிலாந்துக்கு வந்திருக்கிறார்கள். அநேக வழிகளில் இதன் விளைவுகள் ஏற்பட்டிருக்கின்றன. ஆகிலும் அவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படும் ஒன்பது மாதங்கள் போதாதவையென்று நினைக்கிறேன். யுத்தத்துக்குப் பின் இந்தியாவில் தொழிற்சாலை அபிவிருத்தி ஏற்படவேண்டுமானால் இந்தப் பயிற்சி அதிகரிக்கவேண்டுமென்று நினைக்கிறேன்.

தாமஸ்: ஸர் ஆடுல், ஒன்பது மாதப் பயிற்சி போதுமானதல்லவென்று நானும் நினைக்கிறேன். அந்த டயத்திற்குள் ஒரு மாணவர் தொழிற்சாலையின் தந்திரங்களை அறிந்து கூட்டாளிகளுடன் கலந்துகொண்டு, கொடுக்கப்படும் தகவல்களை கிரஹணம் செய்யக்கூடிய நிம்மதியான நிலைமையைப் பெறுவதற்கு இந்த டயம் போதாது. இந்தக் கால அளவு பயிற்சியைப் பொருத்ததென்றாலும் இரண்டு வருடங்களாவது பயிற்சி பெற்றால்தான் ஏதாவது பிரயோஜனமேற்படும். ஸர், ஆடுலாகிலும் அதைரியப்படாதீர்கள். சமீப காலத்தில் தொழிலாளிகளுடையவும் இஞ்ஜினியர்களுடையவும் மனப்பான்மையில் மகத்தான பிரகாசம் காணப்படுகிறது. ஏராளமான வியாபாரம் நடைபெறுமென்றிருந்த காலத்தில் தனிப்பட்ட முதலாளிகள் அதிக லாபத்தைச் சம்பாதிக்க முற்பட்டார்கள். ஆனால் இப்பொழுது அந்த லாபத்தை ஆதரிக்க கூட்டுறவு முறையில் முயற்சி செய்யப்படுகிறது. அதாவது பிரிடிஷ் தொழிற்சாலைகள் இப்பொழுது கபடமற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளுகிறார்கள்.

ஸ்மிட்: இத்துடன் இன்றைய சர்ச்சையை நாம் முடித்துக்கொள்ள வேண்டும். அடுத்த வாரத்தில் இந்தியா எவ்விதம் தொழில் முறையில் முன்னேற்றமடையவேண்டுமென்பதைப்பற்றி விரிவாக சர்ச்சை செய்வோம்.

பெங்களூரிலுள்ள, மதராஸ்—பெங்ளூர் பிராந்தியத்தின் ராணுவ வெல்பேர் தலைமை காரியாலயத்தின் ஸிவில் லியாஸான் ஆபீஸர் புதுக்கோட்டை ஸமஸ்தான ஸ-திவான் அவர்களுக்கு 28-11-44-ல் எழுதிய ஸர்க்குலரின் குறிப்பு.

ஸோல்ஜர்களின் குடித்தனத்துக்கு அனுப்பப்படும் மணியார்டர்கள்.

மேலே சொல்லிய மணியார்டரில் கண்ட தொகைகள் கொடுப்பதில்லையென்று ஸோல்ஜர்களின் குடும்பங்களிலிருந்து அநேக புகார்கள் வந்துகொண்டிருக்கின்றன. பணம் மணியார்டரில் கண்ட நபருக்குக் கொடுக்கப்பட்டு வருகிறதென்று நிச்சயமாகத் தெரிய வருகிறது. அந்த மணியார்டர் ரசீதுகளெல்லாம் பைல் செய்து வைக்கப்படுகின்றன என்பதை குடும்பத்தார்கள் அறியவில்லை. இவ்விதமாகப் புகார் செய்தால் மறு முறை தொகைகளைப் பெறலாமென்று அவர்கள் நினைக்கிறார்கள்போலும். இவ்விதமான ஆதாரமற்ற புகார்கள் மூலம் அனாவசியமான ராயசம்தான் அதிகரிக்கிறது.

'வி' டயரி-1945.

(குறிப்பு புஸ்தகம்).

லினன் ரு. 1—8—0; ஷீப்ஸ்கின் ரு. 1—12—0; மொராக்கோ ரு. 2—4—0.

தபால் செலவு (பிரத்தியேகம்) :—ரிஜிஸ்தர் புக் போஸ்ட்டில் முதல் காபிக்கு ரு. 0—4—3 அத்துடன் சேர்த்து அனுப்பும் ஒவ்வொரு காபிக்கும் ஒவ்வொரு அணா.

காபிகளுக்கு முந்துங்கள்! ஸ்டேட் அச்சாபீஸில் விற்பனைக்குக் கிடைக்கும்.

கீழ்க் கண்ட விலாசத்திலிருந்து வாங்கிக்கொள்ளலாம் :—

காரியதரிசி,
தேசிய யுத்த முன்னணி நிலயம்,
புதுக்கோட்டை (தென் இந்தியா).

பிரகிருத யுத்தத்தில் அயல் நாடுகளில் சேவை புரிந்துவரும் இந்திய துருப்புகளுக்கு பொழுது போக்காய் படிக்கக்கூடிய தமிழ் புஸ்தகங்கள் தேவை. தகுதியான பழைய புஸ்தகங்களை இனமாகக் கொடுக்கும்படியாக பொதுஜனங்களை கேட்டுக்கொள்ளுகிறோம்.

அவைகளை ஸ்டேட் அச்சாபீஸ் சூபரின்டெண்டெண்ட் அவர்களுக்கனுப்ப வேண்டும். அவர் அவைகளைச் சேரவேண்டிய இடத்துக்கு அனுப்பிவிடுவார்.

புதுக்கோட்டை ஸமஸ்தான தேசிய யுத்த முன்னணி நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

பிரஸங்கம் 228. (2-வது பிரிவு).

16-12-44	பாப்பஞ்சிவயல்	... மாலை	7.00
17-12-44	[illegible]	... ,,	7.00
,,	கோட்டைக்காடு	... ,,	7.30
18-12-44	தென்னதிரயன்பட்டி	... ,,	7.00
,,	விசலூர்	... ,,	7.30
19-12-44	ராமச்சந்திரபுரம்	... ,,	7.30
,,	ராயவரம்	... ,,	7.00
20-12-44	மழையூர்	... மாலை	7.00
,,	கரம்பக்குடி	... ,,	7.30
21-12-44	வளரமாணிக்கம்	... ,,	7.00
,,	எம்பல்	... ,,	7.30
22-12-44	விராலிமலை	... ,,	7.00
,,	பொருவாய்	... ,,	7.30

பிரஸங்கம் 229. (3-வது பிரிவு).

23-12-44 முனிஸிபல் ஆபீஸ் ... மாலை 6.00.

24—12—44 முதல் 2—1—45 வரை ... கிறிஸ்துமஸ் விடுமுறை.

யுத்தத்திற்கு ஆள் சேர்த்தல்—விளம்பரம்—மாலை 4-மணி.

16—12—44	வெட்டன்விடுதி.
17—12—44	மருதன்கோன்விடுதி.
19—12—44	ராமச்சந்திரபுரம்.
21—12—44	ஆலங்குடி.
22—12—44	புதுக்கோட்டை.
23—12—44	பொன்னமராவதி.

69412
JL
V01194:19(3M)m, N39
N44

Sri Brihadamba State Press, Pudukkottai. 1,750—20-12-44.